# தள்ளாடியில் மீண்டும் இராணுவ தாக்குதல்?


எல்லோருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்



புத்துணர்ச்சிக்கும்
உற்சாகத்திற்கும்
பாவியுங்கள்
அண்ணா
கோப்பி

அண்ணா இன்டஸ்றி
இணுவில் தெற்கு — இணுவில்



Registered as a News paper in Ceylon [இலங்கை] [இதழ்] 15

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 335
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 1 ஜுல்கஃ 5 புதன்கிழமை 14-1-70



வாடிக்கைக்காரர்கள்
மற்றும்
அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

விக்னேஸ்வரா
ஜவுளி மாளிகை
(பஸ் நிலையத்துக்கு முன்)
யாழ்ப்பாணம்.


## மன்னார் எம்.பி.யிடம் புகார்

மன்னார்.செவ்வாய்

தள்ளாடி பகுதியில் மீண்டும் இராணுவத்தினர் பொதுமக்களை தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக மன்னார் எம் பி திரு. வி ஏ அழககோனுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

தள்ளாடி இராணுவ முகாமுக்கு வெளியே சில இராணுவ வீரர்கள், ஒரு பால் வியாபாரியை கொடுமையாக தாக்கியதாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

அவ்வீதியால்இரவு7 மணிக்கு வந்த ஒரு பால் வியாபாரியை சில இராணுவ வீரர்கள் தடுத்து நிறுத்தினார்களென்றும், அவ் வழியால் வந்த இராணுவத்தினருக்கு தெரிந்த ஒருவர் அவரை காப்பாற்றினரென்றும், மேலும் இது பற்றி கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக மன்னார் எம் பி இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## யாழ். துறைமுகத்தில் உணவு கப்பல்கள்

யாழ்ப்பாணம்,செவ்

யாழ்ப்பாணத்துறைமுகத்தில் கடந்த இரண்டு வாரங்களாக வேலைகள் நடைபெற்றுவருகின்றன சில உணவுக்கப்பல்கள் இங்கு வந்ததைத் தொடர்ந்தே இந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பர்மாவிலிருந்து இங்கு வந்த வர்ண தூர்த்தி என்ற கப்பலிருந்து 7000 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது இவ்வேலைகளைவடமாகாணதுறைமுக கூட்டுறவாளர் சங்கம் செய்து வருகிறது.

சீனாவிலிருந்து1000தொன் நிறையுள்ள மிளகாய், கொத்தமல்லி ஆகியனவற்றையும் ஏற்றி வந்த கப்பலிலிருந்தும் இறக்குமதி வேலைகள் நடை பெற்றது. இக்கப்பல் சீனா திரும்பிவிட்டது. மேலும் சில உணவுக் கப்பல்களை யாழ்ப்பாணம் துறைமுகத்திற்குவரவழைப்பதற்கான முயற்சியில் இங்குள்ள சில சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

## வெளி நாடுகளிடம் இலங்கை

# அரிசிக்காக கையேந்தும் நிலை 1975-ம் ஆண்டில் இருக்காது

## கைதடி பகுதிக்கு நன்நீர் திட்டம்

கைதடி,செவ்

கைதடி கிராமசபைக்கு நன்நீர் வழங்குவதற்கான திட்டம் நிறைவேறப்போகிறது. நன்நீர் திட்ட அதிகாரி திரு வி. கணேசன் நேரடியாக இடத்தைப் பார்வையிட்டு சென்றுள்ளார்.

65,000 ரூபாசெலவில்ான இந்த நந்நீர் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கபோவதாக கைதடி கிராமசபைத் தலைவர் திரு. ஆர். செல்லையா நேற்றுத் தெரிவித்தார்.

நன்நீர் திட்ட அதிகாரியை கிராமசபை தலைவர் திரு ஆர் செல்லையா முன்னாள் 2ம் வட்டார உறுப்பினர் திரு பொ செல்லையா ஆகியோர் சந்தித்து இத்திட்டத்தை விரைவில்ஆரம்பிக்கவேண்டுமெனத் தெரிவித்தனர்.

இந்த நன்நீர் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னாள் 2ம் வட்டார உறுப்பினர் முன்னர் பல தடவை மேலதிகாரிகளை சந்தித்து முயற்சி எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பாக்கியின்றி செலுத்துக

கைதடிகிராமசபைக்குரிய வரியை பாக்கியின்றிச் செலுத்துமாறு இப்பகுதி மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. நன்நீர் திட்டமொன்றைஏற்படுத்துவதற்கு கிராமசபை முயற்சி எடுத்துவருவதால் கிராமசபை வரி இவ்வேளையில் பெரிதும் உபவுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கிலும், கிழக்கிலும் யு. என். பி. அபேட்சகர்

கொழும்பு, செவ்.

ஐக்கிய தேசியக்கட்சி கிழக்கு மாகாணத்தில் எல்லாத் தொகுதிகளிலும் வடக்கு மாகாணத்தில் 3 தொகுதிகளிலும் போட்டியிடும் எனத் தெரியவருகிறது.

வடக்கு கிழக்குமாகாண தேர்தல் இயக்க பொறுப்பாளராகவுள்ள தொழில் மந்திரி திரு எம்.எச் மகமட் அபேட்சகர்கள் பட்டியலை இன்னும் சில தினங்களில் பிரதமர் டட்லி சேனநாயகாவிடம் சமர்ப்பிப்பார்.

திரு. மகமட், கடந்த 3 வாரங்களாக கிழக்குமாகாணத்திலுள்ள ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களை சந்தித்து கிழக்குமாகாண அபேட்சகர்கள் பற்றி முடிவு செய்தார்,

வடக்கு கிழக்குமாகாணங்களில், யூ. என். பி. சார்பில் போட்டியிடும் அபேட்சகர்களின் விபரம் இவ்வார இறுதியில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுமெனத் தெரியவருகிறது.

## விவசாய அமைச்சு வட்டாரங்கள் நம்பிக்கை

கோட்டை,செவ்வாய்

**1975ம் ஆண்டில் இலங்கை அரிசிக்காக வெளிநாடுகளைக் கையேந்தி நிற்கவேண்டிய அவசியம் இருக்காது.**

இப்பொழுதுநடைபெற்று வருவதுபோல அரிசி உற்பத்தி தொடர்ந்து இடம் பெறுமானால் ஓரிரண்டு ஆண்டுகளிலேயே இலங்கை சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வது மட்டுமன்றி மேலதிகமாகவும் அரிசி கையிருப்பில் வைத்திருக்க முடியும்.

...ரங்கள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கின்றன

1975 [illegible]76ம் ஆண்டில் 23,000[illegible]ன் அரிசி மேலதிகமாக உற்பத்தியாகுமென்று விவசாய அமைச்சின் உப குழுவொன்று சேஷ்யம் கூறியிருக்கின்றது.

வீரிய ர[illegible] மேலும் [illegible] விஸ்தீரணமான நிலங்களில் துரிதமாகப் பயிரிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமானால் அரிசி உற்பத்தியில் நாடு கு[illegible]பிட்ட ஆண்டுகளுக்கு முன்னதாகவே சுயதேவையைப் பூர்த்திசெய்து கொள்ளமுடி[illegible] விவசாய அமை[illegible] [illegible] எம். டி. பண்டா நம்புகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


துறைமுக

## வேலைநிறுத்தம் முடிவடையும்?

கொழும்பு, செவ்,

கடந்த 32 நாட்களாக தொடர்ந்து நடந்துவரும் துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் வரும் வெள்ளிக்கிழமையுடன் முடிவடையும் அறிகுறிகள் தென்படுகின்றன. பிரதமருடன் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பயனளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## மாத்தளைநகரசபை புதிய தலைவர்

மாத்தளை, செவ்.

மாத்தளை நகரசபையின்...

பருத்தித்துறை

## மாநகா அங்கஸ்கிற்க...

இன்னும் சில தினங்களில் பிரதமர் டட்லி சேனநாயகா விடம் சமர்ப்பிப்பார்.

தியில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுமென தெரியவருகிறது.

ஆண்டுகளிலேயே இலங்கை சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்வது மட்டுமன்றி மேலதிகமாகவும் அரிசி கையிருப்பில் வைத்திருக்க முடியும்.

விவசாய அமைச்சு வட்டா

மாக உற்பத்தியாகுமென்று விவசாய அமைச்சின் உப குழுவொன்று சேஷயம் கூறியிருக்கின்றது.

வீரிய ரகவித்துக்கள் மேலும் விஸ்தீரணமான

னதாகவே சுயதேவையைப் பூர்த்திசெய்துகொள்ளமுடியும் என்று விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா நம்புகிறார்.

திரு ஆர் செல்லையா முன்னாள் 2ம் வட்டார உறுப்பினர் திரு பொ செல்லையா ஆகியோர் சந்தித்து இத் திட்டத்தை விரைவில் ஆரம்

ற்சி எடுத்துவருவதால் கிராமசபை வரி இவ்வேளையில் பெரிதும் உப்வுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பருத்தித்துறை

## மாநகர அந்தஸ்திற்கு உயர்த்தப்பட வேண்டும்'' -எம்.பி.

உடுப்பிட்டி, செவ்வாய்

''பருத்தித்துறை ஒரு பாரிய நகரம். புராதனச் சிறப்பும், சரித்திரப் புகழும் பெற்ற பருத்தித்துறை நகரசபை, மாநகரசபையாகத் தரம் உயர்த்தப்படவேண்டும். இவ்விஷயத்தில் நகரசபையின் புதிய நிர்வாகத்தினர், தீவிர கவனம் செலுத்தவேண்டும்'' என்று பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கே. துரைரத்தினம் பருத்தித்துறை நகரசபையின் புதிய தலைவராகத் தெரிவு செயயப்பட்ட வழக்கறிஞர் திரு. எஸ். தர்மலிங்கத்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்

பருத்தித்துறை எம். பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''பல வருடங்களுக்குப் பின்னர் இப்பொழுதுதான் பருத்தித்துறைக்கு விமோசனம் ஏற்பட்டுள்ளது.

நகரசபையை அந்தஸ்துக்கு உயர்த்துவதில் நான் முழு முயற்சியையும் எடுப்பேன். சென்ற பத்துவருடங்களுக்குமேலாக நான் இப்பகுதி எம். பியாக இருந்தாலும் எனது ஆலோசனைகளை நகரசபையின் பழைய நிர்வாகத்தினர் தட்டிக் கழித்த படியினால்தான் நான் செய்யவிருந்த பல அபிவிருத்தித்திட்டங்கள் தடைப்பட்டன. நகரின் அபிவிருத்தியில் புதியநிர்வாகத்தினருக்கு எனது முழு ஆதரவையும் கொடுத்து உதவி புரிந்துவருவேன்''

நான்காம் வட்டார உறுப்பினர் திரு. எஸ். விவேகானந்தராசா பேசும்பொழுது முதன்முதலாகத்தாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து சிரமதானப்பணிமூலம் சகல வட்டாரங்களிலும் அசுத்தங்களைத் துப்புரவு செய்யும் வைபவத்தை ஆரம்பித்து வைக்கப் போவதாகவும், நவீன பஸ்நிலையம் நவீன சந்தை அமைககும் முயற்சியில் ஈடுபடப்போவதாகவும் சொன்னார்,

மற்றும் நகரசபை உறுப்பினர்கள் திரு. வ.கமலநாதன் திரு. சேனாதிராஜா திரு.முருகேசு ஆகியோரும் திரு. மு. பொ. வீரபாகுவும் வேறு பலரும் பேசினர்.

திரு. ம. வேலும்மயிலும் தலைமையில் இவ் வரவேற்பு விழா நடைபெற்றது.

## சாவகச்சேரியில் பொங்கல்விழா

மட்டுவில், புதன்

பொங்கல் திருநாளை முன்னிட்டு சாவகச்சேரி விழாக்கோலம் பூண்டுள்ளதுடன், பண்டைத்தமிழர்களின் பண்பாடுகளை விழக்கும் மாட்டு வண்டி உழவு இயந்திரங்கள் கொண்ட ஒரு நீண்ட ஊர்வலம் சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் தலைமையில் பல மைல் தூரம் நகர்ந்து செல்லும்.

கச்சாய் அம்மன் கோவிலிலிருந்து இன்று புறப்படும் பொங்கல்திருநாளின் புனித தன்மையை விளக்கும் இந்த மாட்டு வண்டி, உழவு இயந்திர ஊர்வலத்தில் சுமார் 100க்கு மேற்பட்ட உழவுயந்திரங்களும் 200க்கு மேற்பட்ட மாட்டு வண்டிகளும் பங்குகொள்கின்றன

இந்த ஊர்வலத்தில் திரு. நவரத்தினம் எம். பி. தலைமைதாங்கி முதல்மாட்டு வண்டியை ஓட்டிச்செல்வார்.

மலைநாட்டிலிருந்துவிசேஷ சீனடி சிலம்படி கோஷ்டி, கரகக்கோஷ்டி ஆகியன இந்த ஊர்வலத்தில் பங்கு கொள்ளுகின்றன.

இந்த ஊர்வலம் நுணுவில் பேச்சி அம்மன் கோவிலில் விசேஷமாக அமைக்கப்பட்ட அரங்கை வந்தடைந்ததும் இங்கு பல உரை நிகழ்ச்சிகளும், கவியரங்கு, கருத்தரங்கு, கலைக்கதம்ப நிகழ்ச்சிகள், நாடகம் ஆகியனவும் இடம்பெறும்.

# 'ஈழநாடு' அளிக்கும் பொங்கல் கலை விழா

## இன்று கொழும்பில் குதூகல ஆரம்பம்

பொங்கல் திருநாளை முன்னிட்டு 'ஈழநாடு' ஸ்தாபனத்தார் நடாத்தும் கலைவிழா இன்று மாலை கோலாகலமாக பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. மங்கலமான பொங்கல் திருநாளை இன்பகரமாகக் கொண்டாடுவதற்கு 'ஈழநாடு' தென்னிலங்கை வாசகர்களுக்கு இக்கலை நிகழ்ச்சிகளை பெருமையுடன் அளிக்கிறது.

ஈழத்தின் தலைசிறந்த கலைவிற்பன்னர்களால் அளிக்கப்படும் பலஇசை நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறுகின்றன நாதஸ்வரஇசைமுழங்க கோலாகலமாக ஆரம்பமாகவிருக்கும் இவ்விழாவில் நாடகம், நடனம், இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பி. சண்முகசுந்தரம், பி. வெள்ளைச்சாமி குழுவினரின் நாதஸ்வர கச்சேரியைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகுப்

பல மேடைகளில் நடனமாடி ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ள யாழ்ப்பாணம் கலாலய மாணவியான செல்விஇந்திர காந்தியோகராஜாவின் நடன நிகழ்ச்சி ரசிகப்பெருமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தவிருக்கிறது தொடர்ந்து திருகோணமலை மெல்லிசைக் கலைஞர்பரமேஸ்-கோணேஸ் அளிக்கும் 'இசைத் தென்றல்' இசைநிகழ்ச்சி இடம் பெறும் கீழ்நாட்டு, மேல் நாட்டு வாத்திய இசைகளுடன் திரைப்படப்பாடல்களும், தனிப்பாடல்களும் இந்நிகழ்ச்சிக்கு மெருகூட்டும்.

இத்தனை நிகழ்ச்சிகளையும் பார்த்துக்களைத்தரசிகர்களை குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைப்பதற்காக 'கொமடியன்ஸ்' 'காதல்ஜாக்கிரதை' என்னும் நாடகத்தை மேடையேற்றுகிறார்கள் ஒருபெண் உட்பட ரசிகர்களுக்கு பெரும்பாலும் அறிமுகமான நடிகர்கள் இந்நிகழ்ச்சியை அளிக்கிறார்கள்.

### நிகழ்ச்சிநிரல்

**நாதஸ்வரம்**

பி. சண்முகசுந்தரம்—பி வெள்ளைச்சாமி குழுவினர்

**நடனம்:**

செல்வி இந்திர காந்தி யோகராஜா

**பக்கவாத்தியங்கள்**

கமலா ஜோன்பிள்ளை—அம்பிகா தாமோதரம்—பாட்டு ஜி சண்முகானந்தம் ரி வி பிச்சையப்பா—வயலின் த இரத்தினம்—மிருதங்கம்

**இசை**

திருகோணமலை மெல்லிசைக் கலைஞர்
பரமேஸ் - கோணேஸ்
அளிக்கும்
'இசைத் தென்றல்'
திரைப்படப்பாடல்கள், தனிப்பாடல்கள் அடங்கிய
இசைநிகழ்ச்சி

**வாத்தியக்கோஷ்டி**

எம் பி கோணேஸ், எஸ் இ மகேஸ், வி ஏ கெங்காதரன், கே பி சிவானந்தம், எஸ் பி மோகராவ், கே ஆர் முகுந்தராஜா டி ஏச் ஆரியசேன, பி எம் பிரபாகரன், எம் கே ஜீவானந்தம், எல் சி ஜெயராஜ்

**குரலிசைப்பாளர்**

எம் பி பரமேஸ், கே எஸ் பாலசந்திரன், எஸ் எஸ் ஹெலன், கே ஆர் கமலா

**அறிவிப்பாளர்:**

கே. ரி. செல்வகுமார்

**நாடகம்:**

கொமெடியன்ஸ் அளிக்கும்
'காதல் ஜாக்கிரதை'

கதைவசனம் — டைரக்ஷன்
எஸ். ராம்தாஸ் டி. ராஜகோபால்

**நடிகர்கள்:**

எஸ். ராம்தாஸ், டி. ராஜகோபால், எஸ். செல்வசேகரன். எஸ். பாலச்சந்திரன், கே. மோகன், ஆர். காசிநாதன்.

சுப்புலெட்சுமி காசிநாதன் ஆமினாபேகம் கே. எஸ். பாலச்சந்திரன் சித்ரா தங்கராஜா,

**ஈழநாடு**

**பொங்கல் மலர்**

இன்றைய
ஈழநாடு
பத்திரிகையுடன்
'ஈழநாடு' பொங்கல்மலர்
இணைக்கப்பட்டுள்ளது.

செக். அரசாங்கத்தை

### கவிழ்க்க சதி

பிராக் ஜன. 13

செக், அரசாங்கத்தை கவிழ்க்க சதி ஒன்று நடந்ததாக இன்று கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமான விபரமான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

### மாத்தளைநகரசபை புதிய தலைவர்

மாத்தளை, செவ்.

மாத்தளை நகரசபையின் புதிய தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு ஹுசையின் இன்று தெரிவுசெய்யப்பட்டார். இவருக்கு 7 வாக்குகளும், இவரை எதிர்த்து போட்டியிட்டவருக்கு 6 வாக்குகளும் கிடைத்தன.

### 2வது முறையும் தோல்வி

பூநகரி, செவ்வாய்

'கிளிநொச்சிப் பட்டின சபையின் வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிப்பதற்கான இரண்டாவது கூட்டம் சபைத் தலைவர் திரு. கே எஸ் கந்தையா தலைமையில் நடைபெற்றது வரவு செலவுத்திட்டம் விவாதத்துக்கு எடுக்கப்பட்டபின் இரண்டாவது தடவையாகவும் தோல்வியடைந்தது.

இப் பட்டின சபையில் ஆளும் கட்சியான தமிழரசுக்கட்சி ஆதரவாளர் மூவரும் எதிர்க்கட்சியில் காங்கிரஸ் ஆதரவாளர் நால்வரும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ''எந்த அரசாங்கமானாலும் நாம் ஒத்துழைப்போம்'

மட்டுவில், செவ்.

ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கத்தையும் எதிர்த்து நின்று சிறுபான்மையரான தமிழ் மக்கள் உரிமை பெற்றுவிட முடியாது என்பதை கடந்தகால அரசியல் சம்பவங்கள் தெளிவாக எடுத்துக்காட்டி விட்டன. ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கத்துடனும் ஒத்துழைத்தே தமிழர்கள் உரிமையை பெறமுடியும்.

நுணுவிலில் நேற்றிரவு நடந்த தமிழ் சாங்கிரஸ் தேர்தல் பிரசார கூட்டத்தில் முன்னாள் எம். பி திரு வி. குமாரசாமி பேசும்போது மேற் கண்டவாறு கூறினார்.

திரு. எஸ். சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது: இராமர் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? நமக்கு தேவை நமது உரிமை; தொகுதி முன்னேற்றம் வாலிபர்களுக்கு வேலை இதைநாம் மறக்கக் கூடாது எந்த அரசாங்கமென்றாலும், நாம் ஒத்துழைத்து நமது உரிமைகளைப் பெறும் அதேநேரத்தில் வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்க முயற்சிப்போம்' எதிர் கட்சியிலிருந்தோ அரசாங்கத்தை எதிர்த்தோ எந்த உரிமைகளையும் பெற்று விடமுடியாது.

அரசாங்கத்தை எதிர்த்து போராடக் கூடிய பொருளாதார வசதி வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களிடம் இல்லை. இந்த நிலையில் போராடமுடியுமா? வாலிபர்களுக்கு இன்றுதேவை, உத்தியோகமே தவிர அறப்போராட்டமல்ல. இன்றுள்ள சூழ்நிலையில் போராடஎந்த வாலிபர்களும் தயாராக இல்லை.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் பேசும்போது ஒவ்வொருபெண்ணும் அரசியலைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டுமென்றும் கூறினார்.

சட்டவிரோத

# 'குடியேற்றக்காரர் விஷயத்தில் கிராமசேவகர் ஒத்துழைக்கவில்லை'

## பொலிஸ் மாஅதிபர் தகவல்

கொழும்பு, செவ்வாய்

சட்டவிரோத குடியேற்றக்காரர்களை கண்டுபிடிக்கும் விஷயத்தில், பொலிஸாருடன் கிராம சேவகர்கள் ஒத்துழைக்கவில்லை. இவ்விஷயம் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கிராம சேவகர்கள் பொலிஸாருடன் ஒத்துழைத்தால் சட்டவிரோத குடியேற்றக்காரர்களைகண்டுபிடிக்கும் வேலைகளை மிகவும் சுலபமாக செய்யலாம்.

பொலிஸ் தலைமைக்காரியாலயத்தில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் பொலிஸ் மா அதிபர் திரு. ஈ. எல். அபயகுணவர்த்தன மேற்கண்டவாறு ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் கூறினார்,

திரு. அபயகுணவர்த்தன மேலும் கூறியதாவது: அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 62பேர்கள் உயிரிழந்ததாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 31 பேர் வெள்ளத்தில் மூழ்கியும், 24 பேர் மண்சரிவினாலும், 7 பேர் இடியுண்ட வீடுகளில் சிக்கியும் மரணமானார்கள்.

69, டிசம்பர் 22-ம் தேதி முதல், இம்மாதம் 3-ம் தேதிவரை 20 கொலைகளும், 20 வீதிவிபத்தும் நடந்திருப்பதாகவும், இது கடந்த வருடத்திலும்பார்க்க 30 வீதம் குறைவாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்தக் கால எல்லைக்குள் 37 பேர் தீவிபத்தில் காயமடைந்ததாகவும், கடந்த வருடம் இதே கால எல்லையில் 98 பேர் காயமடைந்ததாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

ராணுவத்தினருக்கு எதிராக மாத்தறைதபால் பகுதியினரால் செய்யப்பட்ட புகார் அவர்களால் வாபஸ் பெறப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வடபகுதியில்உள்ள சில கிராம சேவகர்கள் சட்டவிரோத குடியேற்றகாரர்களுக்கு பங்கீட்டரிசி புத்தகம் வழங்குவதாக செய்யப்பட்ட புகார் சம்பந்தமாக பொலிஸாரினால் விசாரணை நடத்தப்பட்டதாகவும், இவ்விஷயமாக மன்னார் அரசாங்க அதிபரும் விசாரணை நடத்தியதாகவும் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த A 40 என்ஜின் ஒன்றும் செசிபிறேம் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. வேலை நேரத்தில் மட்டும் பார்வை இடலாம். மில்க் வைற் சோப் தொழிற் சாலை, யாழ்ப்பாணம். 1769

## தேவை

தியேட்டர் ஒன்றுக்குமனேஜரும், கஷியரும் தேவை. பிணைப்பணம் ரூ. 3000/- ரூ. 2500/- முன் அனுபவங்களுடன் விளம்பர இலக்கம் 1767, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1767

## கல்வி

மெக்கானிக் பயிற்சி:

எமது ஸ்தாபனத்திற்கு அனுபவம் மிக்க போதனாசிரியர் (Instructor) ஒருவர் உடனடியாகத் தேவைப்படுகின்றார். தகைமை உள்ளோர் தொடர்பு கொள்ளவும். 8-வது பருவ ஒரு வருட முழுநேர மோட்டார் டிராக்டர், டீசல் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் 23-1-70ல் ஆரம்பமாகவிருக்கின்றன. விண்ணப்பப் படிவங்களுக்கு அதிபர், ஸ்ரீராஜ் ஓட்டோமொபைல், என்ஜினியரிங் நிறுவனம், 11 A/11 B, மொம்சாக் மாளிகை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1768

## கல்வி

காலை மாலை வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஜீ. சீ. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தக பாடங்கள், விசேஷ ஆங்கிலம், சிங்களம். தாமதிக்காது விண்ணப்பிக்கவும். (யாழ்ப்பாணம் டியூடோறியல் கல்லூரி, 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1765

## விற்பனைக்கு

காணி:

13 1/4 பரப்புள்ள வீடும் வளவும் விலை பரப்பு ரூபா 4000/- காங்கேசன்துறை றோட்டில் இருந்து அரைமைலுக்கப்பால், தெல்லிப்பளை கிழக்கு குருநாதசுவாமி கோவிலுக்கு அருகாமையில் இருக்கிறது. 32 பரப்புள்ள நெற்காணி பரப்பு விலை ரூபா 750/- உடுவில் குளத்துக்கு அருகாமையில் இருக்கிறது. தொடர்பு கொள்ளவும்: சரவணமுத்து, நவவாசா, ஏழாங்கட்டை ஒழுங்கை, மல்லாகம். 1766


## சுதந்திரதினவிழா ஏற்பாடுகள்

பூநகரி, செவ்வாய்

பூநகரிப்பகுதியில் சுதந்திர தினவிழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இது பற்றி நடைபெறவிருக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் சகல விளையாட்டுமன்றங்களையும், உத்தியோகத்தர்களையும் கலந்துகொள்ளுமாறு பூநகரி காரியாதிகாரி எம். இராசரத்தினம் அழைப்பு விடுத்துள்ளார்.


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது

பொங்கல் வாழ்த்துக்கள்

''ராதா''

# சக்தி பூஜா அகர் பத்தி

★ ஆலயங்கள்

★ திருமண வைபவங்கள்

★ இன்ப நிகழ்ச்சிகளிலும்

உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது

ராதா சக்தி பூஜா அகர் பத்திகளே!


# செய்திச் சுருக்கம்

## புலமைப்பரிசில்

அகில இலங்கை இந்து வாலிபர் சங்கம் இந்துமாணவர்களுக்குப் பல்கலைக்கழகப் புலமைப் பரிசில் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இலங்கை இந்து வாலிபர் சங்கத்தின் தலைவரும் உடுப்பிட்டி ஆட்சிமன்ற அங்கத்தவருமான திரு. மு. செ. தம்பரம் இது பற்றி பத்திரிகைக்கு அளித்த செய்தியொன்றில் பல்கலைக்கழகத்தில் பயிலும் இந்துமத மாணவர்களுள், இந்துமதப் பெற்றோர்களும் நிலைமை நினைக்கும்போது அவர்களின் வருங்காலம் எப்படி அமையுமோ என அச்சம் ஏற்படுகிறது எனத்தெரிவித்தார். இந் நிலையையுணர்ந்தே மேற்படி சங்கம் இந்து சமயம் கற்கும் இந்து மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவது எனத் தீர்மானித்துள்ளது.

0 0 0

## புதிய டைரக்டர்கள்

தேசிய சேவையமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா பெற்றோலியம் கூட்டுஸ்தாபனத்தின் டைரக்டர்கள் சபைக்கு திரு. நோமன் வைத்தியரத்தினவையும், திரு ஏ. எம். எஸ். பெரேராவையும் இரு புதிய டைரக்டர்களாக நியமித்துள்ளார்.

0 0 0

## அறிக்கை கோரியுள்ளார்

வர்த்தக அமைச்சர் திரு. ஹியூ பெர்னண்டோ பொருள் கொள்வனவு இலாகாவைப் புனரமைப்புச் செய்வது குறித்து ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உதவி வர்த்தக டைரக்டர் திரு எஸ் வி. நாணயக்காரவைக் கோரியுள்ளார்.

0 0 0

## இந்தியாவுக்கு கண் தானம்

இலங்கை சர்வதேச கண் வங்கி பாரதஜனாதிபதி திரு. வி. வி கிரியின் இலங்கை விஜயத்தின் ஞாபகார்த்தமாக புதுடில்லியிலுள்ள அகில இந்திய வைத்தியவிஞ்ஞான நிலையத்திக்கு 3 கண்களைத் தானம் செய்துள்ளது.

0 0 0

## இலங்கை வருகிறார்

இம் மாதம் 13-ம் திகதி உலக சுகாதார நிறுவன தென்கிழக்காசிய சுகாதார

## கொள்வனவு நிலையங்கள்

இம்மாதம் 17-ம் திகதி மாதம்பையில் தெங்காய் கொள்வனவு நிலையம் ஒன்று திறக்கப்பட விருக்கிறது. வர்த்தகஅமைச்சு கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், நாத்தாண்டியா, கம்பஹா ஆகிய நகரங்களிலும் இத்தகைய கொள்வனவு நிலையங்களைத் திறந்து வைக்கத் தீர்மானித்துள்ளது.

0 0 0

வர்த்தக அமைச்சர் திரு. ஹியூ பெர்னண்டோ தெங்குக் கைத்தொழில்சம்பந்தமான சகல விடயங்களையும்ஆராய்ச்சி செய்வதற்கு வர்த்தக அமைச்சிலுள்ள புதிய பிரிவொன்றை ஆரம்பித்துள்ளார். இப்பிரிவுக்கு வர்த்தக அமைச்சின் உதவி டைரக்டர் திரு பண்டா எக்கநாயக்கா பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

## மலிபன் உரிமையாளர் மரணம்

இலங்கையின் பெரிய கைத்தொழில் அதிபர்களில் ஒருவரான மலிபன் ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு ஹினி அப்புஹாமி நேற்று முன்தினம் தமது 70-வது வயதில் காலமானார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 14—1—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 9-00, 10-00, 11-00. பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00. இரவு 8-00, 9-00, 10-30. காலை 7-15 இசைச்சித்திரம் — 'உழவர் திருநாள்', 7-30 தைத்திருநாள் — படப்பாட்டுகள், 8-15 தைப்பொங்கல் — கவியரங்கம், 9-03 நாதஸ்வரம். பகல் 12-03 திரைகானம், 1-00 கதம்பம் — 'தைபிறந்தால்'.

இரவு 8-00 முஸ்லிம் நி[illegible] 9-30 உழவர் விழா, 10-00 நேயர்விருப்பம்.

## புதுவருட [illegible]ாழ்த்து

ஜனாதிபதி கிரி

## நல்லூர் விஜயம் ரத்துக்கு காரணம்

யாழ்ப்பாணம், புதன்

பாரத ஜனாதிபதி திரு. வி. வி கிரி நல்லூர் கந்தசுவாமி கோவிலில் மேற்கொள்ளவிருந்த தரிசனம் குறிக்கப்பட்ட நேரவேளையில் பூஜை நடைபெறுததால் தவிர்க்கப்பட வேண்டியதாயிற்று என நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர் தம்பிரான் சுவாமிகள் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது:-

நல்லைக்கந்தன் ஆலயத்தில் பூஜைகள் காலவரையறையுடன் நடப்பது யாவரும் அறிந்ததே. முன் இவ்வாலயத்திற்கு விஜயம்செய்த மல்வத்தை பீடாதிபதி, பிரதமர் டட்லி சேனநாயக்கா, முன்னாள் பாரத ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் ஆகியோரும் நீதியரசர்களும் ஆலயத்தில் பூஜாகால வரைவுக்குட்பட்டே விஜயம் மேற்கொண்டனர். ஆனால் ஜனாதிபதி கிரி அவர்களது நிகழ்ச்சி நிரல் அதற்கேற்ப தயாரிக்கப்படாததாலேயே தரிசனம் ரத்தாயிற்று. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஆலயத்தில் விசேஷ சலுகைகள் எவருக்கும் அளிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அலங்கார உற்சவம்

கொழும்பு, செவ்வாய்

இலங்கைப் பல்கலைக்கழகக் குறிஞ்சிக்குமரன் கோவில் அலங்கார உற்சவம், இன்று முதல் இம்மாதம் 22-ம் தேதிவரை நடைபெறும்

தினமும் காலை 9 மணி முதல் நண்பகல் வரை அபிஷேக ஆராதனையும், மாலை 5 மணிக்கு விசேடபூசையும் இரவு திருவுலாக்காட்சியும் நடைபெறும்.

## திருடர் நடமாட்டம்

பருத்தித்துறை
செவ்வாய்

மீண்டும் கரவெட்டிப் பகுதியில் திருடர் நடமாட்டம் ஆரம்பித்துள்ளது.

நேற்று முன்தினமிரவு ஒரு வீட்டிலிருந்து ஆடு ஒன்றும் இன்னொரு வீ[illegible]லிருந்து புதிய சைக்கிள் [illegible]ன்றும் களவாடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அநேகமாகத் தியேட்டர்களில் இரவு நடைபெறும் இரண்டாவது காட்சியின் பின்னரே இவ்வித கள[illegible]ள்

## ''இலங்கையில் தமிழர் பெரும்பான்மை ஆகமுடியாது''

ஊர-மண்டைதீவு, செவ்

''இன்றைய நடைமுறை ஆட்சிமன்ற அமைப்பில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் இடங்களில்கூட அவர்கள் சிறுபான்மையினமாகவே விளங்குகின்றது. எந்தவித முறைகளைக் கையாண்டாலும் இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையினராக மாறிவிடமுடியாது. தமிழினம்எந்தமுறையில் சிங்களவருடன் நடந்து கொள்ளுகின்றதோ அதில் தான் அவர்களின் முன்னேற்றம் தங்கியுள்ளது''

இவ்வாறு தீவுப்பகுதி முன்னேற்றக் கழகத் தலைவர் வழக்கறிஞர் ப. கதிரவேலு புங்குடுதீவு இறுப்பிட்டியில் நடைபெற்றதேர்தல்ஆலோசனைக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழர் பெரும்பான்மையினராக வாழும் இடங்களில்உள்ள சிங்களமக்களுக்குச் சகல உரிமைகளையும் நாம் முதலில் வழங்க முன்வரவேண்டும். அப்போதுதான் அவர்களும் தமிழருக்கு உரிய உரிமைகளை மறுக்காது கொடுக்க முன்வருவார்கள் என்று கூறினார்.

இன்றைய நிலையில் சர்வோதய அடிப்படையில் ஓ அரசியலமைப்பை அமைத்து அதன் மூலம்தான் தமிழர்-சிங்களவர் என்ற பாகுபாடு நீங்கி சகல உரிமையுடனும் இரு பகுதியினரும் வாழக்கூடிய ஓர் நிலையை அமைக்க முடியும்என்றும் இவ்வழியை எமது இருபெரும் தமிழ்க் கட்சிகள் கடந்த 25 வருடகாலமாகக் கடைப்பிடித்திருந்தால் தமிழினத்துக்கு விமோசனம் கிடைத்திருக்கும் என்றும் அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

திரு. க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வ. பொன்னம்பலம், திரு. சி. கந்தப்பிள்ளை, திரு. க. வைத்தியநாதன், திரு. ப. கந்தசாமி, திரு க. செல்வராஜா, திரு. க. சுந்தரலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்.

## 'சொல்லுடன் நிற்காமல் செயலிலும் காட்டுவோம்'

### வரவேற்புக் கூட்டத்தில் புதிய ப.ச, தலைவர் உரை

மாவிட்டபுரம், செவ்வாய்

''சென்ற 20ஆண்டுகளாக நடந்த பட்டினசபை நிர்வாகத்திலும் பார்க்க சிறந்த நிர்வாகம் நடந்தி பட்டினத்தை முன்னேற்றவே நாம் கனவான்கள் ஒப்பந்தம் செய்தோம். நாங்கள் நால் வரும் சொல்வீரராகவும் மட்டும் இராதுசெயல்வீரராககிராமத்துக்குசேவையாற்றுவோம் அதற்கு கிராம மக்கள் யாவரும்ஒத்துழைப்புத்தர வேண்டும்.''

இவ்வாறு காங்கேசன் துறை பட்டினசபையின் புதிய தலைவராக திரு. க. ஜெயபாலசிங்கம் தெரிவு செய்யப்பட்டதைபாராட்டி கௌரவிக்கும் முகமாக மயிலிட்டிதிருப்பூர் அண்ணா அறிவக ஆதரவில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசும்போது திரு க. ஜெயபாலசிங்கம் கூறினார்.

தலைவருடன் உபதலைவர் திரு. நாகரத்தினம் வட்டார அங்கத்தவர் திரு. பேரின்பம், 3-ம்வட்டார உறுப்பினர் திரு. குருசாமி ஆகியோர் மயிலிட்டிகாசநோயா

கள் ஆகியவற்றை திருத்த வேண்டுமெனவும் பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

## கமிட்டி உ[illegible]ப்பினர்

கைதடி, செவ்வாய்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் நுணாவில் கிளை நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. தலைவர்: எஸ். பொன்னம்பலம், காரியதரிசி: ரி நல்லதம்பி, பொருளாளர்: கே சிவயோகநாதன். 9 நிர்வாகசபை அங்கத்தவர்களும்தெரிசெய்யப்பட்டனர்.

## இன்று நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், புதன்

இணுவில் பரமானந்த வாசிகசாலை நூல்நிலையத்தின் 29-வது ஆண்டுநிறைவு விழாவும், பொங்கல் விழாவும் திரு. ச. வே. பஞ்சாட்சரம் எழுதிய 'சின்னஞ்சிறு கதைகள்' நூல் அறிமுக விழாவும் இன்று புதன்கிழமை மாலைநடைபெறவிருக்கிறது.

வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ் விழாவுக்கு திரு, 'தேவன் யாழ்ப்பாணம்' தலைமை வகிப்பார்.

திருவாளர்கள் கே. எஸ். ஆனந்தன், க. நவரத்தினம் சபா ஜெயராசா ஆகியோர் நூல் ஆய்வுரைநிகழ்த்துவர். புலவர் ம. பார்வதிநாதசிவம் 'உழைப்பின்பெருமை' பற்றி உரையாற்றுவார். இன்னிசை, நாடகம்முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

## இவர்களுக்கு திரும்பவேலை

விஸ்வமடு, செவ்வாய்

ஒட்டுசுட்டான் விவசாயப் படையில் தற்காலிக வேலை நீக்கம்செய்யப்பட்ட 11 பேர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படுமென்று தலைமைப்பீடம் அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இவ்வாறு வேலைநீக்கம் செய்யப்பட்டு திரும்பவும் வேலைக்கழைக்கப்பட்டவர்களில் திரு. கணேஷ் என்ற பொறுப்பதிகாரியும் ஒருவரென்பது குறிப்பிடத்தக்கது.

## தனிஏற்பாடு வேண்டாம்

கோவை அருகில் உள்ள திருப்பூரில் எல்லைக்காந்திக்கு விசேஷமாக மாமிச உணவு தயாரிக்கப்பட்டிருந்தது, அவருடன் வந்திருந்தமற்றவர்களுக்கு சைவ உணவு பரிமாறப்பட்டது. எனக்கு மட்டும் ஏன் தனிஏற்பாடு என்று அதனை அவர் மறுத்து விட்டார்.


## திருமண அழைப்பு

சௌமிய வருடம் தை மாதம் 4-ம் திகதி (17-1-70) சனிக்கிழமை இரவு 10 மணி முதல் இரவு 11 மணி வரையிலுள்ள சுப முகூர்த்தத்தில்

| செல்வன் | செல்வி |
| --- | --- |
| ஆறுமுகம் (B. A. அக்கவுண்டன்ற் ஸ்ரீலங்கா அஸ்பெஸ்டஸ் | சரோஜினிதேவி |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது

# ராதா சக்தி பூஜா அகர் பத்திகளே!

ஏக விநியோகஸ்தர்கள்:

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068.

புகையிலை, தென்னை, காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் இந்தப் பூச்சி புழுக்களை அழித்து உங்கள் பண வருவாயைப் பாதுகாக்க, ... பாவியுங்கள்




# மெற்றசிஸ்டொக்ஸ்'ஆர்'




குத்தும், உறிஞ்சும் சகல பூச்சிகளையும் கொன்றொழிக்க வல்லது மெற்றசிஸ்டொக்ஸ். அது ஒரு தொகுதிப் பூச்சி கொல்லி. தெளித்ததும் அது பயிர்ச் சாற்றுடன் சேர்ந்து, காய்கறியைத் தாக்கும் அழுக்கணவன், ஒட்டுண்ணி, வெண் ஈ, பனிப்பூச்சி, பேன், தென்னையைத் தாக்கும் செவ்வண்டு, அனைத்தையும் அழிக்கும்.

மெற்றசிஸ்டொக்ஸ்—ஒரு பேயர் தயாரிப்பு. அது நம்பிக்கையான, விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.

உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி.

இலங்கையில் விநியோகிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட், 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

...தானம் செய்துள்ளது.

0 0 0

## இலங்கை வருகிறார்

இம் மாதம் 13-ம் திகதி உலக சுகாதார நிறுவன தென்கிழக்காசிய சுகாதாரக் கல்வி ஆலோசகர் திரு. வி. இராமகிருஷ்ணன் இலங்கை வரவிருக்கிறார். இவர் இலங்கையில் இரண்டுமாத காலம்வரை தங்கிநிற்பார் எனவும் தங்கிநிற்குங்காலத்தில் கண்டி, கேகாலை, களுத்துறை ஆகிய இடங்களிலுள்ள சுகாதாரக் கல்வித் திட்டங்களுக்கு விஜயம் செய்வார் எனவும் தெரியவருகிறது.

நிக...., 9-30 உழவர் விழா, 10-00 நேயர்விருப்பம்.

## புதுவருட வாழ்த்து

யாழ்ப்பாணம், புதன்

முல்லைத்தீவு பட்டனசபை விசேஷ கூட்டத்தில் பொது மக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் புதுவருடவாழ்த்து தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேறியுள்ளது.

அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது: முல்லைத்தீவுப் பட்டனசபைத் தலைவரும் அங்கத்தவர்களும் பட்டனசபை எல்லைக்குள் வசிக்கும்பொதுமக்களுக்கும் இச்சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும், மின் நிலையத்திற் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும், முல்லைத்தீவு பட்டனசபையின் சார்பில் புதுவருடவாழ்த்துக்களை தெரிவிக்கின்றது. இப்புதுவருடத்தில் பொது மக்களும்சபை ஊழியர்களும், இன்பமாக வாழ இச்சபை இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

## சிறுவனின் பரிதாப மரணம்

பருத்தித்துறை. செவ்வாய்

மலையகத்தைச் சேர்ந்த பெரிய கறுப்பன் உதயகுமாரன் என்னும் 10 வயதுச் சிறுவன் துன்னாலைப் பகுதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றில் விழுந்து மரணமான சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது. விளையாட்டில் சிறுவன் ஈடுபட்டிருந்தபோதே இம்மரணம் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தற்செயலாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## வெள்ள அழிவு விபரம்

பூநகரி, செவ்வாய்

வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விபரங்களுடன் பூநகரி கிராமசபை மண்டபத்துக்கு சமுகமளிக்கும்படி கமத்தொழில் சேவைப்பகுதி இப்பகுதியிலுள்ளசகலபயிர்ச்செய்கைக் குழுக்காரியதரிசிகட்டும் அறிவித்துள்ளது.

இதற்கிணங்க பயிர்ச்செய்கைக்குழுவினர் இப்பகுதியில் ஏற்பட்டவெள்ள அழிவு பற்றிய விபரங்களை சேகரித்து வருகின்றனர்.

...ருந்து புதிய சைக்கிள் ...ன்றும் களவாடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அநேகமாகத் தியேட்டர்களில் இரவு நடைபெறும் இரண்டாவது காட்சியின் பின்னரே இவ்வித களவுகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

## பெயர் பலகை திருட்டு

கைதடி, செவ்வாய்

கைதடி எருதிடல் குடியேற்றத்திட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்தின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நவநூல் நிலையத்தின் பெயர்ப்பலகையை விஷமிகள் சிலர் கையாடிவிட்டதாக மேற்படி நிலைய நிர்வாகத்தினர் புகார் தெரிவித்துள்ளனர்.

## 'வீடுகளிலிருந்து வெளியே செல்லாதீர்'

லேகோஸ், ஜன 13

பியாவ்ரா நாட்டு மக்களை தத்தம் வீடுகளிலிருந்து வெளியே செல்லவேண்டாமென்றும், அவர்களின் இருப்பிடங்களுக்கு உணவு வகை அனுப்பப்பட்டுவருவதாகவும் நைஜீரிய ஜெனரல் கோவான் இன்று வானொலியில் அறிவித்தார்.

பியாவ்ரா அதிபர் கேணல் ஒஜுக் எங்கே, ஏன் சென்றுள்ளார் என்பதுபற்றி எதுவித கருத்துக்களையும் கூறுவதற்கு ஐ. நா. சபை பொதுக் காரியதரிசி யுதாண்ட் மறுத்துவிட்டார் என்று ஒருசெய்தி கூறியது.

## இருகலை தமிழ் மன்ற விழா

இருகலை, செவ்.

இருகலை தமிழ் இசை மன்றத்தின் 3-ம் ஆண்டு நிறைவு கலைவிழா நாளை நடைபெறவிருக்கிறது. அன்றையதினம் மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மாவிட்டபுரம், செவ்வாய்

கைதடி தெற்கு ஐக்கிய நாணயசங்க 18 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 24ம் திகதி நடைபெற இருக்கிறது.

கைதடி சைவ ஐக்கிய சங்க வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் புதிய உத்தியோகஸ்தர் தெரிவும், மற்றும் சில விடயங்கள் பற்றியும் ஆராயப் பட இருக்கிறது.

பாலசிங்கம் கூறினார்.

தலைவருடன் உபதலைவர் திரு. நாகரத்தினம் வட்டார அங்கத்தவர் திரு. பேரின்பம், 3-ம்வட்டார உறுப்பினர் திரு. குருசாமி ஆகியோர் மயிலிட்டிகாசநோயா ஆஸ்பத்திரிக் கடிகாமையிலிருந்து மயிலிட்டி திருப்பூர் கடற்கரைக்கு ஊர்வலமா அழைத்துச்செல்லப் பட்டனர்.

திரு. வ. சண்முகானந்தம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஜெயபாலசிங்கம் மேலும் பேசுகையில்:-

நாம்சேவையாற்றுவதைத் தான்க் முதல் நோகமாக கொண்டிருக்கிறோம். எமக்கு பதவி ஆசையில்லை. இளைஞர்களாகிய நாம் சிறந்த நிர்வாகத்தை நடத்திபட்டினத்தை முன்னேற்ற உழைப்போம் என்றார்.

உபதலைவர் நாகரத்தினம் பேசுகையில் "இன்றைய தினம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. பட்டினசபையின் வரலாற்றிலேயே ஒரு புதிய முறையில் இன்றைய தேர்தல் நடைபெற்றுள்ளது" என்றார்.

திருப்பூர் மீனவர் பயன் பெறும்வகையில் மீன் பிடித் துறைமுகம் அமைக்க வேண்டுமென்றும் கடற்கரையிலுள்ள கற்பாறைகளை உடைத்து சமப்படுத்த வேண்டுமென்றும் வீதிகள் வடிகால்

இரவு 11 மணி வரையிலுள்ள சுப முகூர்த்தத்தில்

| செல்வன் | செல்வி |
|---|---|
| ஆறுமுகம் (B. A. அக்கவுண்டன்ற் ஸ்ரீலங்கா அஸ்பெஸ்டஸ் புரொடக்ஸ் லிமிடெட் ஜா-எலை) அவர்கட்கும் | சரோஜினிதேவி அவர்கட்கும் |

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமணம் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் யாபேரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

திருமதி இ. சிவப்பிரகாசம்.
திரு. சிவபசுபதி (சுப்றீம் கோடு கொழும்பு)
அவர்களும் பாரியாரும்.
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

திரு. செ. பொன்னுத்துரை ஐயர்
(பிறக்ரர் & நொத்தாரிஸ்)
தொண்டைமானாறு,
அவர்களும் பாரியாரும்.

1912

வாடிக்கையாளர்கள் மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் எமது அன்பு கலந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

# டயரும்ஸ்


54, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள் செலுத்தும் பரிபூரண அஞ்சலி

# ஏ. எவ். ரேமண்ட்ஸ்

ஈமக் கிரியை ஏற்பாடுகள்

0231



புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.

147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.

ஏ. எவ். ரேமண்ட்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடைய பியாப்ரா படைகளுக்கு புதியதளபதி உத்தரவு

## பொதுமன்னிப்பு அளிப்பதாக ஜெனரல் கோவான் அறிவிப்பு

## கேணல் ஒஜுக்கு சாம்பியாவில் தஞ்சம்

லேகோஸ், ஜன. 13

பியாப்ரா நைஜீரிய சமஷ்டிபடைகளிடம் வீழ்ச்சியடைந்துவிட்டது. சமஷ்டி படைகளிடம் சரணடையும்படி தமது படைகளுக்கு பியாப்ரா ராணுவத்தின் பதில் தளபதி உத்தரவிட்டிருக்கின்றார்.

பியாப்ரா படைகள் சரணடைவதற்கு இணங்கியிருப்பதைத் தொடர்ந்து பொதுமன்னிப்பு ஒன்றை நைஜீரிய அதிபர் ஜெனரல் கோவான் அறிவித்திருக்கிறார்.

### சரணடையும்படி உத்தரவு

ஆயுதங்களை வைத்துவிட்டு சமஷ்டி படைகளிடம் சரணடையும்படி பியாப்ரா போர் வீரர்களுக்கு தற்காலிக ராணுவத் தளபதி கேணல் ஈஃபியோன் உத்தரவிட்டார். பியாப்ராவில் தனி அரசு எதுவும் இல்லையென்றும் அதற்கு பொறுப்பாய் இருந்தவர்கள் வெளியேறிவிட்டதாகவும் ஜெனரல் ஈஃபியோன் அறிவித்தார். தமது படைகள் சரணடையத் தயாராய் இருப்பதாகவும் தாக்குதலை நிறுத்திவிட்டு சமரசத்துக்கு ஏற்பாடு செய்யும்படியும் அவர் நைஜீரிய அதிபர் ஜெனரல் கோவானுக்கு அறிவித்திருக்கின்றார். சமரசம் பேசுவதற்கு பிரதிநிதிகளை அனுப்பும்படியும் அவர் கேட்டுக்கொண்டார். சமரசப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு தமது தூதுவர்கள் எங்குவேண்டுமானாலும் போவதற்கு தயாராய் இருக்கிறார்கள் என்று கேணல் ஈஃபியோன் கூறியுள்ளார்.

### பொது மன்னிப்பு அளிக்க கோவான் சம்மதம்

பியாப்ரா படைகள் சரணடைவதற்கு சம்மதித்ததையொட்டி பியாப்ராவில் பயனற்ற முறையில் தனி ராஜ்யம் அமைக்க முயற்சிசெய்தவர்களுக்கு பொதுமன்னிப்பு அளிப்பதாக ஜெனரல் கோவான் அறிவித்தார்.

பெரிய அளவில் பியாப்ரா படைகள் சரணடைவதற்கு ஏற்பாடுசெய்யும்படி சமஷ்டி படைகளுக்கு ஜெனரல் கோவான் உத்தரவிட்டார். எதிர்ப்பு ஏற்பட்டால் தொடர்ந்து தமது படைகள் தாக்குதல் நடத்துவார்கள் என்றும் சமரசப் பேச்சுக்கள் நடத்த தூதர்களை அனுப்புவதாகவும் அவர் கூறியிருக்கிறார். உள்நாட்டு சண்டை காரணமாக அவதிகளுக்குள்ளான மக்களுக்கு உடனடியாக உதவிகளும், மருந்துகளும் போய்ச்சேரவேண்டும் என்றும் இல்லையென்றால் அந்த மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### கேணல் ஒஜுக்கு சாம்பியாவில் புகலிடம்

கேணல் ஒஜுக்கு சாம்பியாவுக்கு இன்று போய்ச்சேரக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதுவரை அவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை கேணல் ஒஜுக்குவிற்கு அடைக்கலம் கொடுப்பதற்கு சாம்பியா ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கின்றது. பியாப்ராவைத் தனி நாடாக ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளில் சாம்பியாவும் ஒன்று. கேணல் ஒஜுக்கு பியாப்ராவைவிட்டுப் புறப்பட்டவுடன் பியாப்ரா ராணுவத்துக்கு கேணல் ஈஃபியோன் தளபதியானார். பியாப்ரா படைகளை சரணடையும்படி கேணல் ஈஃபியோனே இப்பொழுது உத் [illegible]

...வகையிலும் உதவும் என்று பிரஞ்சு அதிபர் பொம்பிடோ அறிவித்திருக்கிறார்.

### இத்தாலி நன்கொடை

பியாப்ராவில் கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கும் மக்களுக்கு உடனடி நிவாரண உதவிகள் செய்வதற்கு இத்தாலி முன்வந்திருக்கின்றது. 300 ஆயிரம் பவுண் நிவாரணம் வழங்க இத்தாலி முடிவு செய்திருக்கின்றது.

### 20 லட்சம் டாலர் யு. எஸ். நன்கொடை

பியாப்ரா கஷ்ட நிவாரணத்துக்கு எந்த வகையிலும் உதவிகளைச் செய்வதற்கு அமெரிக்கா முடிவு செய்திருக்கின்றது. அதிபர் நிக்ஸன் உடனடியாக 20 லட்சம் டாலர் இதற்காக ஒதுக்கியுள்ளார். வெள்ளை மாளிகை அதிகாரிகளுடன் அவர் அவசரப் பேச்சுக்கள் நடத்தினார். பிரிட்டிஷ் பிரதமர் வில்சனோடு அவர் தொடர்ந்து தொடர்பு கொண்டுவருகின்றார்.

பியாப்ராவில் உடனடியாக நிவாரண வசதிகள் செய்யப்படாவிட்டால் இன்னும் சில நாட்களில் 50 அல்லது 60 லட்சம் பேர் பட்டினிக்கும் கொடிய நோய்களுக்கும் இரையாகக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

### சண்டையினால் பலியாகும் குழந்தைகள்

நைஜீரிய உள்நாட்டுக் கலகங்களால் [illegible] கான பொதுமக்கள் [illegible] களா[illegible] பசிபட்டினியா [illegible]

### 'படகுசேவையை விஸ்தரிக்குக

முசலி, செவ்.

கேரதீவு-சங்குப்பிட்டி படகு சேவை நேரத்தை விஸ்தரிக்கும்படி இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர். பிற்பகல் 6 மணிக்குப் பின்னர் படகுச்சேவை இல்லாமல் இருப்பதினால் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பிரயாணிகள் கேரதீவில் இரவில் தங்கவேண்டியிருப்பதாகப் புகார் கூறப்படுகின்றது.

சாப்பாடின்றி தங்கவசதி இல்லாமல் இப்பகுதிப் பிரயாணிகள் கேரதீவில் தாமதிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படுவதாக இவர்கள் குறை கூறிக்கொள்கின்றனர்.

### பிரசவவிடுதி

முசலி, செவ்.

மடுரோட்டிலிருந்து 13 மைல் களுக்கப்பாலுள்ள பாலம்பிட்டி கிராமத்தில் பிரசவவிடுதி அமைப்பதற்கான நடவடிக்கைகளில் மன்னார்-வவனியா சுகாதார அத்தியட்சகர் டாக்டர் பி. இரத்தினசபாபதி ஈடுபட்டுள்ளார்

இப்பகுதியில் இதுவரை காலமும் இருந்துவந்த பிரசவ மாதர்களின் கஷ்டம் இதை அமைப்பதன் மூலம் நீங்கிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### புதிய தலைவர் உறுதி

உடுப்பிட்டி, செவ்.

''பருத்தித்துறை நவீன நகரமாகத் திகழவேண்டும். இதற்கு நகரின் அபிவிருத்தி வேலைகளைத் துரிதமாகச் செய்து முடிக்க வேண்டி உள்ளது. புதிய நிர்வாகத்திற்குப் பொதுமக்கள் எவ்வித பேதமும் இன்றி ஒத்துழைப்புத் தருவதின் மூலமே பருத்தித்துறை முன்னேற்றம் அடையும்''

இவ்வாறு பருத்தித்துறை நகரசபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்ய[illegible]

## முதல்வர் கருணாநிதிக்கு 45 பவுண் கிரீடம்

நாகர்கோவில், ஜன. 13

'நீங்கள் அன்போடும் ஆர்வத்தோடும் எனக்குச் சூட்டிய இந்த 45 பவுண் கிரீடம் தி. மு. க மாளிகையை அலங்கரிக்குமே யொழிய எனது மாளிகையையல்ல. இக்கிரீடமும் ஏற்கனவே தர்மபுரியில் சூட்டப்பெற்ற 25 பவுண் கிரீடமும் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கிடையில் ஏலத்தில் விடப்பட்டோ அல்லது விற்கப்பட்டோ கழகத்திற்காகவே பயன்படுத்தப்படும்

இவ்வாறு கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி நாகர்கோவிலில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாண்டிச்சேரி முதலமைச்சர் பரூக் மரக்காயரும் கலந்துகொண்ட இவ்விழாவில் தமிழக முதலமைச்சருக்கு, அண்ணாவின் உருவமும், தி. மு க. கொடியும் பொறிக்கப்பட்டதும், 250 கற்கள் பொறிக்கப்பட்டதும் 45 பவுண் எடைகொண்டதுமான தங்கக்கிரீடம் சூட்டப்பட்டது. அத்துடன் நாகர்கோவில் இடைத்தேர்தலின் போது படுகொலைசெய்யப்பட்ட தி. மு. க. தொண்டர் கிட்டுவின் குடும்பத்திற்கு தி. மு. க. தலைமை நிலையச்சார்பில் ரூ. 2000 மும், முரசொலி சார்பில் ரூ. 250மும் கருணாநிதியால் வழங்கப்பட்டன.

இன்னும் இப்பகுதியில் நிறுவப்பட்டுள்ள அண்ணா சிலையை கருணாநிதி திறந்து வைத்ததுடன் அண்ணா நினைவாகக்கட்டப்பட விருக்கும் விளையாட்டரங்கிற்கான அடிக்கல்லும் அவரால் நாட்டப்பட்டது. அத்துடன் கருணாநிதி கலையரங்கிற்கான அடிக்கல் பாண்டிச்சேரி முதலமைச்சர் பரூக் மரக்காயரால் நாட்டப்பட்டது

## திருக்குறள் இந்தியாவின் தேசிய நூலாகவேண்டும்

### தமிழ்நாடு அமைச்சர் யோசனை

சென்னை, ஜன. 13

திருக்குறள் இந்தியாவின் தேசிய நூலாக ஆக்கப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு ஆக்கப்பட்டால் இன்று நாட்டிலே உலாவும் வேற்றுமைகளெல்லாம் மறைந்து ஒற்றுமை உண்டாகும்.

சென்னை ஐலண்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் பொருட்காட்சியில் ரயில்வே இலாகாவினரால் செய்யப்பட்ட சிறுவர்களுக்கான ரயிலை ஓடவைக்கும் விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில், தமிழக உள்ளூராட்சி அமைச்சர் முத்துசாமி மேற்கண்டவாறு கூறினார்.

மத்திய அரசு ரயில்வே இலாகா அமைச்சர்கோவிந்த மேனன் விழா ஆரம்பத்தில் ரயில்வே இலாகாவினரால் அமைக்கப்பட்டிருந்த அரங்கைத் திறந்துவைத்தார். சிட்டிபாபு வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. மத்லியூ உட்பட ரயில்வே இலாகா அதிகாரிகள் பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

திரு. முத்துசாமி மேலும் பேசுகையில், இதுபோன்ற சுற்றுலா பொருட்காட்சிகள் நமது நாட்டின் கலாசாரம் பண்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றன. இவற்றில் நாம் அதிக கவனம் செலுத்தவில்லை. இந்திய மத்திய அரசு அதிக பணம் ஒதுக்கி எமது நாட்டிலுள்ள புராதன கோவில்களையும் மற்றும் கலைச்சின்னங்களையும் பாதுகாக்கவேண்டும். அப்பொழுதுதான் வெளிநாட்டு சுற்றுப்பிரயாணிகளின் கவனம் நம்பக்கம் திரும்பும் என்றார்.

## தென் ஆபிரிக்காவில்

## தமிழ்நாடுச் செய்திகள்

### விலைகள் இறக்கம்

தமிழ்நாட்டில் ரேஷன்முறை ரத்தானதால் அரிசிவிலை குறைந்துவருவதாக செய்திகள்கூறுகின்றன பொங்கலுக்குப்பின்னர் அரிசியின் விலை மேலும் குறையலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

0 0 0

### இந்திரா ஆட்சி நீடிக்கவேண்டும்

இந்திரா ஆட்சி அடுத்த பொதுத்தேர்தல் வரை நீடிக்கவேண்டும் என்று தமிழ்நாடுமுதல்வர் திரு. மு. கருணாநிதி கூறினார். நாகர்கோவில் வரவேற்பின்போது இந்தக்கருத்தை அவர்வெளியிட்டார். இந்திரா அரசுக்கு தி. மு. க ஆதரவு அளித்திராவிட்டால் ஜனநாயகத்துக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்று அவர் கூறினார்.

0 0 0

### சொத்துச் சண்டை

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி சொத்துக்களுக்கான போட்டி ஆரம்பமாகியிருக்கின்றது.

காங்கிரஸ் கட்சி சொத்துக்களை சின்டிகேட் ஆதரவாளர்கள்பயன்படுத்துவது, சட்டவிரோதம் என்றுகூறி இந்திரா ஆதரவுதலைவர் திரு. சி சுப்பிரமணியம் திருககககனுக்கு நோட்டீஸ் அனுப்பிவைத்திருக்கிறார். சென்னையிலுள்ள சத்தியமூர்த்தி இல்லமும் தமிழ்நாடு காங்கிரஸின் இதர சொத்துக்களும் சின்டிகட் காங்கிரஸ் வசமுள்ளன.

0 0 0

### கல்லக்குடி

டால்மியபுரம் ரெயில் நிலையத்தில் இருந்த பெயர்ப்பலகை இப்பொழுது கல்லக்குடி பழங்கானத்தம் என்று மாற்றிஎழுதப்பட்டிருக்கின்றது. டில்லியிலிருந்து பெயர்மாற்றப் பெயருக்கான உத்தரவுவருவதில் தாமதம் ஏற்பட்டதால் இதுவரை பெயர் மாற்றி எழுதப்படாமல் இருந்துவந்தது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கேணல் ஒஜுக்கு சாம்பியாவுக்கு இன்று போய்ச்சேரக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் இதுவரை அவர் எங்கு இருக்கிருர் என்பது தெரியவில்லை. கேணல் ஒஜுக்குவிற்கு அடைக்கலம் கொடுப்பதற்கு சாம்பியா ஏற்கனவே ஒப்புக் கொண்டிருக்கின்றது. பியாப்பிராவைத் தனி நாடாக ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளில் சாம்பியாவும் ஒன்று. கேணல் ஒஜுக்கு பியாப்பிராவைவிட்டுப் புறப்பட்டவுடன் பியாப்ரா ராணுவத்துக்கு கேணல் ஈஃபியோன் தளபதியானர். பியாப்ரா படைகளை சரணடையும்படி கேணல் ஈஃபியோனே இப்பொழுது உத்தரவிட்டிருக்கின்ருர்.

பியாப்ராவின் வீழ்ச்சி நாட்டின் ஐக்கியத்துக்கு ஏற்பட்ட வெற்றியாகும் என்று ஜெனரல் கோவான் கருத்து வெளியிட்டிருக்கின்ருர்.

பியாப்ரா வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அங்கு பட்டினியாலும் பிணிகளாலும் பீடிக்கப்பட்டுக்கிடக்கும் மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் கிடைப்பதற்கு உலகநாடுகள் பலவும் அவசர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

### பிரிட்டன் ஏற்பாடு

பியாப்ரா கஷ்ட நிவாரணங்களுக்கு ஏற்பாடு செய்வதில் பிரிட்டன் மிகவும் அக்கறைகொண்டிருக்கின்றது. பிரிட்டிஷ் மந்திரி யொருவர் இன்று நைஜீரிய தலைநகருக்கு விஜயம்செய்து பியாப்ராவுக்கு நிவாரண உதவிகள் அனுப்புவது பற்றி ஆராயவிருக்கின்ருர்.

### யுதாண்ட் வேண்டுகோள்

பியாப்ரா மக்கள் கஷ்டங்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகள் மேற்கொள்வதில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் ஈடுபட்டிருக்கிருர். உதவிகள் புரியும்படி உலக நாடுகளையும் அவர் கேட்டுக்கொண்டிருக்கின்ருர்.

ஆபிரிக்கநாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் யுதாண்ட் இன்று நைஜீரியாவுக்கு விஜயம் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### பிரான்ஸ் வாக்குறுதி

பியாப்ராவில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கு ஐ. நா. மேற்கொண்டுள்ள நிவாரண நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் எல்லா

### பலியாகும் குழந்தைகள்

நைஜீரிய உள்நாட்டுக் கலகங்களால் லட்சக்கணக்கான பொதுமக்கள் பிணிகளாலும் பசிபட்டினியாலும் வாடுகிருர்கள். விசேஷமாக சிறு குழந்தைகளே போஷாக்கற்ற உணவினுலும், பட்டினியாலும் பிணிகளாலும் தினமும் மடிந்து வருகிருர்கள். சண்டையில் செத்தவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் சரியாகத் தெரியாவிட்டாலும் பசி பட்டினி, பிணிகளால் இதுவரை 20 லட்சம் பேருக்கு மேல் பலியாகியிருப்பதாக கருதப்படுகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சபைகளும் இதுவரை தம்மால் இயன்ற அளவு நிவாரண உதவிகள் செய்துவந்துள்ளன.

... வித பேதமும் இன்றி ... துறைப்புத் தடுவதின் மூலமே பருத்தித்துறை முன்னேற்றம் அடையும்.''

இவ்வாறு பருத்தித்துறை நகரசபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. எஸ். தர்மலிங்கம் பருத்தித்துறை நகர மக்களால் நேற்றிரவு அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

இதுவரை காலமும் இருந்து வந்த கஷ்டங்களும், குறைகளும் படிப்படியாகத் தீர்த்து வைக்கப்படுமென்றும் சகல வட்டாரங்களின் தேவைகளையும் மதித்து உதவி செய்வதே தமது இலட்சியமென்றும் புதிய தலைவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு ரயில்வே இலாகா அமைச்சர்கோவிந்த மேனன் விழா ஆரம்பத்தில் ரயில்வே இலாகாவினரால் அமைக்கப்பட்டிருந்த அரங் ... யும் பாதுகாக்கவேண்டும். அப்பொழுதுதான் வெளி நாட்டு சுற்றுப்பிரயாணிகளின் கவனம் நம்பக்கம் திரும்பும் என்ருர்.

பெயர்மாற்றப் பெயருக்கான உத்தரவுவருவதில் தாமதம் ஏற்பட்டதால் இதுவரை பெயர் மாற்றி எழுதப்படாமல் இருந்துவந்தது.

## தென் ஆபிரிக்காவில் இந்தியர்க்கு கொடுமை

நியுயோர்க், ஜன. 13

தென்னபிரிக்காவில் இந்தியர்கள் கொடுமைப்படுத்தப்படுவதாக செய்திகள் வருகின்றன.

தென் ஆப்பிரிக்காவில் குமாரி சாந்தி நாயுடு என்ற இந்தியப் பெண் சித்திரவதைக்கு உள்ளானதாக மிஸ். மேரி பென்ஸன் (தென் ஆபிரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டவர்) ஐ நா. கமிட்டி முன் சாட்சியம் கூறினர். அவர் தான் இந்தத் தகவலை வெளியிட்டார்.

காந்திஜியின் சீடராக இருந்தவர் காலஞ்சென்ற திரு. டி. என். நாயுடு அவருடைய புதல்வி மிஸ் சாந்தி.

அரசாங்கத்துக்கு எதிரிடையாகச் சதி செய்ததாக வந்த வழக்கில் சாந்தி ஒரு எதிரி. அவரை சிறையில் இம்சைப்படுத்தி வாக்கு மூலம் வாங்கினர்கள் பிறகு கோர்ட்டில் விசாரணை வந்தபோது தாம் இம்சிக்கப்பட்ட வரலாற்றை அவர் கூறி வழக்கில் பங்கு கொள்ள மறுத்துவிட்டார். பெப்ரவரியில் அவரதுவழக்கு மீண்டும் விசாரணைக்கு வரவிருக்கிறது.

தேச விரோத வழக்கு எதிரிகள் விஷயத்தில் முக்கியமாக இந்தியர் விஷயத்தில், பல கொடுமைகள் இழைக்கப்படுவதாகவும், மனித உரிமைகள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும் மிஸ் பென்ஸன் கோரினர்.

சாந்தி ஐந்து நாள் சித்திரவதைக்கு உள்ளானதாக அவர் தெரிவித்தார். எல்லா இடற்பாடுகளையும் தாங்கிக் கொண்டு இந்தியர்கள் காட்டுகின்ற தைரியம் போற்றுதற்குரியது என்ருர் மிஸ். பென்ஸன்.

## மன்னரில் விஞ்ஞானக்கல்வி வசதியில்லை; மாணவர் அவதி

முசலி, செவ் மாணவர்கள் வெளியிடங்களுக்குச்செல்ல வேண்டியிருக்கிறது.

மன்னர் மாவட்டத்தில் விஞ்ஞானக்கல்வி வசதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

இப்பிரிவிலுள்ள எருக்கலம் பிட்டி மகாவித்தியாலயம் புனித-சவேரியார் கல்லூரி, அல் அஷார் மகாவித்தியாலயம், விடத்தல்தீவு மகாவித்தியாலயம், அடம்பன் முருங்கன் மாவித்தியாலயம் போன்றபாடசாலைகளில் விஞ்ஞானக்கல்வி வசதியில்லாமலிருப்பதால்

விஞ்ஞான ஆய்வு கூட்டம் பெறும் முயற்சியில் மன்னர் எம். பி. திரு. வீ.ஏ. அழகக்கோனும் மாவட்ட கல்வி அதிபதி திரு நடராசாவும் ஈடுபட்டுள்ளனர்.

### விஸ்வமடு முகாம்

கொழும்பு, செவ்வாய்

விஸ்வமடுவிவசாயப்படை முகாம் மீண்டும் இம்மாதம் 23-ம்தேதி ஆரம்பிக்கப்படவிருப்பதாக விஸ்வமடு முகாம் பொறுப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

மழையின் காரணமாக வேலை செய்யும் இடங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் அறிவித்தபடி வேலை தொடங்கமுடியாமலிருப்பதாகவும் மறுபடி வேலை இம்மாதம் 23-ம்திகதிஆரம்பிக்கப்படுவதால் விவசாயப்படையினர் 22-ம் திகதி மாலை முகாமிற்கு வரவேண்டு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### தபாற்கந்தோர் தரம் உயர்வு

முசலி, செவ்வாய்

மன்னர், தபால் கந்தோரும் பண்டி விரிச்சான் உப தபால்கந்தோரும் இவ்வாண்டில் தரம் உயர்ந்தப்படவிருக்கிறது.

மன்னர், வவுனியா தபால் கந்தோர் பரிசோதகர் மேற்படி தபால் கந்தோர்களின் தரம் உயர்த்தும் வேலையில் ஈடுபட்டுள்ளார்.

### உண்டியல் களவு

சுழிபுரம், செவ்வாய்

மூளாய் முருகமூர்த்தி கோவில் உண்டியல் உடைக்கப்பட்டு அங்கிருந்த பணம் திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. நேற்றுமுன் தினமிரவு இக்களவு நடைபெற்றுள்ளதாக சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.


இந்தப் பொங்கலுக்கு நம்நாட்டில் உற்பத்தியாகும்
'வலிகோப்டெக்ஸ்' புடவைகளை அணிந்து ஆனந்தமடையுங்கள்!
வலி-மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜம்
சங்கானை.
தொலைபேசி: 525 — மானிப்பாய்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், பாவனையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
மில்க்வைற் நீலசோப் 50 மேலுறைகளை அனுப்பி ஓர் 1970-ம் ஆண்டு கலண்டரை பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
527, கே. கே. எஸ். ரோட், [போன்:7233] யாழ்ப்பாணம்

100க்கு மேற்பட்ட பரிசுகள்




விங்க் மை
வாங்கி
பெட்டிகள் சேர்த்து
பரிசுகள் பெறுங்கள்
விபரங்களுக்குத்
துண்டுப்பிரசுரங்களைக்கேட்டுவாங்குங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று ஈழநாடு காரியாலயத்திற்கு விடுமுறை. ஆனாலும் ஈழநாடு பத்திரிகை வெளிவரும். நாளைய ஈழநாடு வாரமலர் இன்றே வாசகநேயர்களுக்குக்கிடைக்கும்.

### மணிவாக்கு

நல்ல முறையில் நடைபெறும் சமூகத்தில், வைத்தியர்களாவது நீதி நிபுணர்களவாது அவர்களைப் போன்ற மற்றவர்களாவது சமுதாயத்துக்குத்தான் உழைப்பார்கள். அறிவை விலைக்கு விறகமாட்டார்கள். வரும்படிக்காகத் தங்கள் மூளையை உபயோகப்படுத்தமாட்டார்கள்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் ௧ 1-ந் திகதி (14-1-70)


## தை பிறக்கிறது வழிபிறக்கட்டும்

இன்று தைப்பொங்கல். தமிழரின் தனிப் பெரும் திருநாள் என்று பெருமையுடன்கூறிக்கொண்டாடும் பண்டிகை இது. உழவர் திருநாள் என்றும் பாடுபட்டுப் பயிர்செய்த உழவர் தனது உழைப்புக்குக் கிடைத்த பயனுக்காக நன்றிக் கடன் செலுத்தும் பெருநாள் என்றும் பல முறையிலும் இந்நாளை அழைப்பர்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழரின் முதுமொழி. இந்த நம்பிக்கையுடன் தான் அவர்களுக்கு என்ன துன்பம் தொல்லை நேர்ந்தாலும் அவற்றைச் சகித்துச் சமாளித்து வாழ்கின்றனர்.

சமீபத்தில் நமது நாட்டில் பல இடங்களிலும் தொடர்ந்து பெய்த மழையினாலும் அதனால் ஏற்பட்ட வெள்ளத்தினாலும் மக்கள் பலர் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் பயிர்ச் செய்கையும் ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்குஇந்த இயற்கையின் சீற்றத்திலிருந்து தப்பியிருக்கும் மக்கள் உதவி செய்து பொங்கல் பண்டிகையைச் சிறப்பாகக்கொண்டாடவேண்டும்.

உணவில் தன்னிறைவு காண்பதற்காகப் பிரதமரும் தேசிய அரசாங்கத்தினரும் பெரு முயற்சிசெய்துவருகின்றனர் 1975-ம் ஆண்டில் உணவில் நமது நாடு தன்னிறைவு பெற்றுவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

உழவர் திருநாள் தைப் பொங்கல் தமிழரின் திருநாளாக மட்டும் இருக்கக் கூடாது இந்நாட்டில் வாழும் இதர மக்களுக்கும் இத்திருநாளின் பெருமையை உணர்த்தி உழவுக்கும் தொழிலுக்கும் தமிழர் எந்த அளவுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி அவர்களையும் பங்குகொள்ளச் செய்து ஐக்கியத்தையும் நிலைநாட்ட உதவவேண்டும்.

இந்நாட்டில் வாழும் தமிழரைப் பொறுத்தவரையில் இனி அவர்களுக்கு உழவும் தொழிலும்தான் வாழ்க்கையாக அமைய முடியும். அரசாங்க உத்தியோகத்தையோ, வெளிநாட்டுப் பதவிகளையோ இனியும் அதிகம் நம்பியிருக்க முடியாது.

எனவே உழவிலும் புதிய புதிய தொழில்களிலும் அவர்கள் ஈடுபடுவதற்கு தை பிறக்கிறது, வழிபிறக்கட்டும் என்ற நம்பிக்கையுடன் இன்றே சங்கற்பம் செய்து கொள்ளவேண்டும்.

## "காந்திக் கிராமம் அவரின் சின்னமாக அமையவேண்டும்"

சுழிபுரம், செவ்வாய்

"உலகிலுள்ள ஊழல்கள் ஒழியவேண்டுமானால் காந்தி நெறியைப் பின்பற்றுவதே சிறந்த வழியாகும். எமது வாழ்க்கையில் மாற்றங்கள் அமைக்கப்படவுள்ள சாந்திக் கிராமம் காந்தி நூற்றாண்டு விழாவின் ஓர் சின்னமாக அமையவேண்டும்"

இவ்வாறு தொல்புரம் காந்திக் கிராம இயக்க விசேட

## மங்கலம் பொங்கவே வாழ்க!

-புலவர் சிகாமணி வ.மு இரத்தினேஸ்வரன்-

செங்கதிர் மண்டலம் செழும் பொருள்துலக்க
இங்கிதச் செல்வம் எழில்வலம் செறிக்க
தினகரன் எங்கும் தீம்பயன் காட்ட
அனைவரும் மங்கல மணிபெறக் கூடினர்
மங்கா இங்கிதப் பொங்கலே! வாழி!
செங்கரும் பிநீளர் செவ்விய பாலும்
சங்கரன் சண்முகன் ஐங்கரன் பானு
தங்கள் வாழ்வு தருந்திருக் கடவுளர்
மங்கமில் பூசனை பாங்காப் புரிந்து
மங்காத் திறத்தால் யாவரும் வாழ்க!
முன்னோர்:-
கொலையும் புலையுங் கோதென நீக்கி
அலைபுன லாடி அன்புடன் வாழ்ந்தனர்
இன்றும் என்றும் இன்பச் சிவனாரின்
நன்றுடை யருளே நாமடை வோமே.

## பொங்கலே பொங்கலே வருக!

-பு. கெங்காதரன்-

மனதினில் இன்பங்கள் பொங்க — புது
மலர்வுகள் வாழ்வினில் பொங்க
பண்புகள் அன்புள் பொங்க — தைப்
பொங்கலே பொங்கலே வருக!

வறுமைகள் நீங்கிட வேண்டும் — வாழ்வில்
வளமைகள் ஓங்கிட வேண்டும்
உரிமைகள் சேர்ந்திட வேண்டும் — சாதிக்
கொடுமைகள் தீர்ந்திட வேண்டும்

ஆதவன் ஒளிதர வேண்டும் — மழை
அளவுடன் பொழிந்திட வேண்டும்
சோதனை நீங்கிட வேண்டும் — யாரும்
சுகமுடன் வாழ்ந்திட வேண்டும்

ஈழ மணித்திரு நாட்டின் — எழில்
கூடிக் கொழித்திட வேண்டும்
தோழமை கொண்டினம் யாவும் — ஒன்று
சேர்ந்து பழகிட வேண்டும்.


தைப்பொங்கலன்று
மங்களம் பொங்குக

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரால்
அலங்கரித்து இல்லத்தை நிறைவுசெய்யுங்கள்

சகல, சமய, சமரச, சன்மார்க்க, சிந்தனைச்
சித்திரக் கலண்டர்

கேளுங்கள், வாங்குங்கள்
பாருங்கள், [illegible]வியுங்கள்


புங்குடுதீவில் உள்ளூராட்சி வாரம்

## ஆறுதினங்களுக்கு கொண்டாட ஒழுங்கு

ஊரதீவு, செவ்வாய்

புங்குடுதீவுக் கிராமசபையால் உள்ளூராட்சி வாரம் மிக விமரிசையாகக்கொண்டாடப்படவுள்ளது. இது பற்றி நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் விழாவை வழிபாட்டுத்தினம், இலக்கியதினம், சர்வோதயதினம் சேரி ஒழிப்பு வீடமைப்புத் தினம், விளையாட்டுத்தினம், கலைத்தினம் என வகுத்து ஆறுதினங்கள் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வழிபாட்டுத் தினவிழாவுக்கு பொறுப்பாளராக கிராமசபைத்தலைவர் கா. மதியாபரணம், சபை அங்கத்தவர் செ. சோமசுந்தரம் ஆகியோரும் இலக்கிய தினவிழாவுக்கு புலவர் ஈழத்துச் சிவானந்தன், வித்துவான் பொன். அ. கனகசபை, வித்துவான் சி. ஆறுமுகம், சபை உறுப்பினர்களான சு. திருநாவுக்கரசு, வி. இராசரத்தினம் ஆகியோரும், சர்வோதய தினவிழாவுக்கு திரு. மு. தளையசிங்கம், சபை உறுப்பினர்களான திருமதி யோகம்மா, க. கனகசபை ஆகியோரும் சேரி ஒழிப்பு வீடமைப்புத் தினத்துக்கு சபை உறுப்பினர்களான மா. க. வைத்தியநாதன், நல்லதம்பி ஆகியோரும், விளையாட்டுத் தினத்துக்கு சபை உறுப்பினர்களான வே. சி. அம்பிகைபாகன் பெ. கார்த்திகேசு ஆகியோரும் கலைத் தினவிழாவுக்கு சபைஉறுப்பினர்களான கு வி தம்பித்துரை ஜே பி செ தருமலிங்கம் ஆகியோரும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். இலக்கியவிழாவன்று புங்குடுதீவு எழுத்தாளர்களான நாவேந்தன், புலவர் ஈழத்துச்சிவானந்தன், மு பொன்னம்பலம், மு தளையசிங்கம், சண்முகநாதன், மீனலோசனி, ஆகியோர் எழுதிய புத்தகங்களின் கண்காட்சி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

### பூநகரியில்

பூநகரியில் உள்ளூராட்சி வாரவிழாவைச் சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளெல்லாம் தீவிரமாகச் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளில் பூநகரிக் கிராமசபைத் தலைவரும், பூநகரி படித்த இளைஞர் முன்னேற்றச்சங்கமும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இவ் வைபவத்தில் உள்ளூராட்சி அமைச்சர் பிரேமதாசா கலந்து கொள்வதுடன், நூல்நிலையமொன்றையும் கிசவைத்திய சாலையையும் திறந்துவைக்கவிருக்கிறார்.

## கிணற்றுள் இறந்து கிடந்த மாணவன்

புலோலி, செவ்வாய்

பாடசாலை மாணவன் ஒருவர் ஆசிரியர் வீட்டு கிணற்றில் இறந்துகிடக்கக் காணப்பட்டார். துன்னாலையைச் சேர்ந்த ஆசிரியர் முருகேசு கந்தையா என்பவரது வீட்டிலிருந்து கல்வி கற்க வந்த கண்டியைச் சேர்ந்த கறுப்பன் வீரையா மகன் உதயகுமார் (வயது 10) என்பவரே மரணமானவராவார்.

### வீதி [illegible]ருத்தப்படும்

ஊரதீவு, செவ்வாய்

போக்குவரத்து [illegible] வசதியின்றிக் கஷ்டப்பட்ட ஊரதீவு மக்களின் குறை விரைவில்தீரப் போகின்[illegible] வாகனங்கள் போகமுடி[illegible] சீர்கெட்டிருந்த ஊரதீவு மின்னியம் வாய்க்கால் வீதிக்கு கல்[illegible]போட


ரசிகப் பெருமக்களுக்கும் மற்றும்
அன்பர்கள்ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!
ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 630 930
பிரிப்போயா, போயா2-30 மணி
எஸ் எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த
சாரதா

ரசிகப் பெருமக்களுக்கும்
மற்றும்
அன்பர்கள்ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!
REGAL JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Poya, Pre-poya 4 shows
Charlton Heston,
Maximilian Schell



## கலைவிழா

ஊரதீவு, செவ்வாய்

ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தினரின் ஐந்தாவது கலைவிழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. புங்குடுதீவு கிராமசபை உறுப்பினர் திரு. செ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினரும், தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவருமான திரு. வ. நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.


ரசிகப்பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30 போயாதினங்கள் 2-30
சிவாஜி பத்மினி - கே. ஆர் விஜயா நடித்த
பாலாடை

ரசிகப்பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4]காட்சிகள்]
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப்பெண்

ரசிகப்பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
6வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னமாக அமையவேண்டும்

சுழிபுரம், செவ்வாய்

''உலகிலுள்ள ஊழல்கள் ஒழியவேண்டுமானுல் காந்தி நெறியைப் பின்பற்றுவதே சிறந்த வழியாகும். எமது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அப்போதுதான் வாழ்வு சிறக்கும். எமது தேவைக்கு அதிகமான எண்ணங்களிஞல் திட்டங்களிஞல் எந்த விடயமும் கை கூடாமல் போய்விடுகின்றது. சகல வசதிகளும் நிறைவாக கிடைக்க வேண்டுமென்பதற்காகவே அரசாங்கம் காந்தி நூற்ருண்டு விழாவை ஒட்டி காந்திக் கிராமங்களை ஆங்காங்கே அமைக்க முன்வந்துள்ளது. தொல்புரத்திலுள்ள பாணுவெட்டியில் அமைக்கப்படவுள்ள சாந்திக் கிராமம் காந்தி நூற்ருண்டு விழாவின் ஓர் சின்னமாக அமையவேண்டும்''

இவ்வாறு தொல்புரம் காந்திக் கிராம இயக்க விசேட கூட்டத்தில் பேசிய திரு. சிவ. உ. சோமசேகரன் குறிப்பிட்டார்.

சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காந்திக் கிராமம் அமைப்பு சம்பந்தமான இயக்க முறைகள் ஆராயப்பட்டன. வலிமேற்கு காரியாதிகாரி என். மாணிக்கநடராசா உட்படப் பலர் காந்திக்கிராம அமைப்பை விளக்கிப் பேசினர்.

## சைவ சமய புகழ்..

(பொங்கல் மலர்த் தொடர்ச்சி)

தமது குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் வினவியறியும் முறையில் இதனை உமாபதிசிவம் இயற்றியருளிஞர். 13 வெண்பாக்கள் கொண்டது.

10. போற்றிப்பஃருெடை: தமது ஞாஞசாரியரைப் போற்றும் முறையில் உமாபதிசிவம் இயற்றியது இறைவன் உயிர்க்குச் செய்யும் பலவகை உதவிகளையும் விளக்கிப் போற்றுவது.

11. கொடிக்கவி: தில்லைத் திருவிழாவில் கொடியேற்றத்தின் பொருட்டு உமாபதிசிவம் பாடியது. 4 வெண்பாக்கள் கொண்டது. ஐந்தெழுத்தின் உண்மையை அறிவுறுத்துவது.

12. நெஞ்சுவிடு தூது; உமபதிசிவம் தமது நெஞ்சைத் தம்முடைய குருவாகிய மறைஞானசம்பந்தரிடம் சென்று அவர்தம் கொன்றைமாலையை வாங்கி வருமாறு தூது விடுக்கும் முறையிற் கலி வெண்பாவாற் பாடியது.

13. உண்மைநெறி விளக்கம்: சைவசித்தாந்த நூல்களில் 'தசகாரியம்' எனப்படும் பத்துவகை அருளியல் அனுபவங்களைச் சுருக்கமாகத் தொகுத்துத்தருவது (6 பாடல்கள்) இதனை இயற்றியவர் சீகாளித் தத்துவநாதர் எனவும் உமாபதி சிவம் எனவும் கூறுவர்.

14. சங்கற்பநிராகரணம் சிவஞானசித்தியாரின் பரபக்கம் போல மாயாவாதம் ஐக்கியவாதம் பாடணவாதம், பேதவாதம் முதலிய பல்வேறு சமயங்களின் கொள்கைகளையும் அவை பொருந்தாமைக்குரிய காரணங்களையும் திட்பநுட்பம் அமைய விளக்கிச் செல்வது. இதனை உமாபதிசிவம் சகம் 1235— (கி.பி 1313) ஆம் ஆண்டில் இயற்றியதாகக் குறிப்பிட்டுள்ளார். வரலாற்று ஆராய்ச்சிக்கு இக்குறிப்பு மிகவும் பயன்படுவதாகும்.

இச் சாத்திரங்கள் பதினான்கும் தமிழகத்துச்சமய வரலாற்றில் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. இவற்றை அடிப்படையும் உயிர்ப்புமாகக் கொண்டே திருவாவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள் குன்றக்குடி முதலிய புகழ்மிக்க சைவ ஆதீனங்கள் பலவும் தோன்றிப்பல நூற்ருண்டுகளாக நிலைபெற்று வருகின்றன: 'சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது மிக விரிந்ததும் பெரும்செல்வாக்குவாய்ந்ததும் ஐயத்துக்கு இடமின்றி உண்மையிலேயே பெருமதிப்புக்கு உரியதும், இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைகளுள் எல்லாம் தலைசிறந்ததுமாக விளங்குகின்றது. இது தனிச்சிறப்பாக தென்னிந்தியாவிற்கே உரிய தமிழ்மதம் (சௌன்கை) ஆகும் தென்னிந்திய மக்களின் மிகச்சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவ சித்தாந்தம்' என்று பேரறிஞர் ஜி. யூ. போப்- அவர்கள்கூறியிருப்பது நாம் இங்கு சிந்தித்தற்குரியது.

வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரிமாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சித்திரக் கலண்டர்

கேளுங்கள், வாங்குங்கள்

பாருங்கள், பாவியுங்கள்

எங்கும் கிடைக்கும்

ஏகவிநியோகஸ்தர்:

லீலா ஸ்டோர்ஸ்,

கொழும்பு — 11.

விற்பனைக்கு கமிஷன் கழித்து கிடைக்குமிடம்:

செ.ஆ.செல்லையா அன் கோ

110, ஆஸ்பத்திரி வீதி,

பெரியகடை, — யாழ்ப்பாணம்.

ரசிகப் பெருமக்களுக்கும்

மற்றும்

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது

பொங்கல் வாழ்த்துக்கள்

பொங்கல் வெளியீடு

இன்று காலை 10 மணியுடன் ஆரம்பம்

மனோகரா யாழ்ப்பாணம்

தினசரி பிற்பகல் 2 மணி, 6-30மணி, இரவு 9-30மணி

போயா தினம் காலை 10-30 மணி

வொலி நாணயக்கார நீடா பர்ணந்து

அசோகா பொன்னம்பெரும பீ. எஸ். பெரேரா

மற்றும் பலர் நடித்த

ரொபின் தம்புவின்

பிக்பொகட்

### மரண அறிவித்தல்

முன்னுள் உடுவில் கிராமசபைத் தலைவரும் மலாயன் பென்சனரும் காலஞ்சென்ற இராசம்மாவின் அருமைக்கணவரும் திருமதி மகேஸ்வரி, புவனேஸ்வரி, (சைவப்பாடசாலை மயிலணி) நாகேஸ்வரி, ஜெகநாதன் (இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்), இராமநாதன் (லண்டன்) யோகநாதன், இரத்தினேஸ்வரி ஆகியோரின் தந்தையும், இரத்தினசபாபதி (இளைப்பாறிய கல்விப்பரிசோதகர்), ஆறுமுகம் (உப அதிபர், வசாவிளான் மத்தியமகாவித்தியாசாலை), இராமநாதன் (கணக்குஇலாகா) கமலாதேவி ஆகியோரின் மாமனுருமாகிய K. N. அம்பலவாணர் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று (14-1-70) பி.ப. 3 மணிக்கு பூவோடைக்கு எடுத்துச்செல்லப்படும். 1487

யின்றிக் கஷ்டப்பட்ட ஊரதீவு மக்களின் குறை விரைவில்தீரப் போகின்றது. வாகனங்கள் போகமுடியாமல் சீர்கெட்டிருந்த ஊரதீவு மின்னியம் வாய்க்கால் வீதிக்கு கல்... போடவிருக்கிறது. கிராமசபை உறுப்பினர் திரு. செ.சோமசுந்தரத்தின் வேண்டுகோளின் பேரில் புங்குடுதீவு கிராமச்சபை இவ்வீதியின் திருத்தத்துக்கென ரூபாய் பத்தாயிரம்வழங்கியுள்ளது. இதற்கானவேலை இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

### மகஜர் அனுப்பினர்

விஸ்வமடு, செவ்வாய்

தர்மபுரம் நெத்தலியாற்றிலிருந்து தர்மபுரம் பெரிய குளத்திற்குச் செல்லும் வாய்க்காலுக்குக் குறுக்கே பாலம் அமைத்துத்தருவதாக மேலிடத்தார் கடந்த பத்துவருடங்களுக்கு முன் அறிவித்திருந்தும் இதுவரையில் எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை இதனுல் அதிருப்தியுற்ற இப்பகுதிமக்கள் தங்கள் தொல்லைகளை நீர்ப்பாசன இலாகாவிற்கு மகஜர் மூலம் தெரிவித்துள்ளனர்.

### 'நிவாரணம் வழங்குக'

மண்டைதீவு, செவ்

மண்டைதீவு கடற்கரையோரத்திலுள்ள வெள்ளத்திஞல் அதிகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண நிதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மண்டைதீவு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கம் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு விநாயகலிங்கத்துக்கு ஒரு மகஜரை அனுப்பிவைத்துள்ளது

### ஆசிரியர் இடமாற்றம்

பருத்தித்துறை, செவ்.

காலி மத்தியமகா வித்தியாலயத்தைச் சேர்ந்த திரு. பொன். பரஞ்சோதியும், திருமதி சகுந்தலாதேவி பரஞ்சோதியும் முறையே கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். விஞ்ஞானப் பட்டதாரியான திருமதி பரஞ்சோதி உயர்தரவகுப்புகளில் சிங்கள மொழி மூலம் விஞ்ஞானம் போதிக்கக் கூடியவரென்பது குறிப்பிடத்தக்கது.

எமது

பொங்கல் வாழ்த்துக்கள்!

REGAL JAFFNA

Daily 4-45, 7 &9-45, p.m

Poya, Pre-poya 4 shows

Charlton Heston,

Maximilian Schell

in

COUNTERPOINT

ரசிகப் பெருமக்களுக்கும்

மற்றும்

அன்பர்கள்ஆதரவாளர்கள்

அனைவருக்கும்

எமது

பொங்கல் வாழ்த்துக்கள்!

வல்வெட்டித்துறை

றஞ்சனு தியேட்டர்

தினசரி: 6-30, 9-30

சிவாஜி—எம்.ஜி.ஆர்.

நடித்த

கூண்டுக்கிளி

4-30க்கு மட்டும்

SWEET NIGHTS



★ சிவாஜி ★ பத்மினி

★ ஜெமினி ★ சாவித்திரி

★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா

★ நாகேஷ் ★ மனோரமா

நடித்த

திருவருட் செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும்

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்

தமது அன்பு கலந்த

பொங்கல்வாழ்த்துக்களை

தெரிவிக்கின்றனர்

ராஜா யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள்

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா — சோ

நடித்த

ஒளி விளக்கு

ரசிகப்பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது அன்பு கலந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ சரோஜாதேவி

★ நாகேஷ் ★ விஜயலலிதா ★ மனோரமா

மற்றும்பலர் நடித்த

அஞ்சல்பெட்டி 520

அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
D. சேனுதிராஜா
(பல் கட்டுபவர்-கண் பரிசோதகர்)
9, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELA NADU
பொங்கல் மலர்

எல்லோர்க்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்
பூரண திருப்தி
அளிப்பது
பி. வி. எம்.
ஒறெஞ்ஜ் பீடி
தயாரிப்பாளர்கள்
பி. வி. எம்.
ஒறெஞ்ஜ் பீடி கம்பனி
நவாலி றேட், ஆனைக்கோட்டை
யாழ்ப்பாணம்.

# தமிழர் நல்வாழ்வுக்கு இன்று சங்கற்பம் செய்வோம்

## திரு. ஜி. ஜி. யின் வாழ்த்துச் செய்தி

பொங்கல் திருநாளையொட்டி யாழ்ப்பாண எம். பி.யும் தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு ஜி. ஜி. பொன்னம்பலம் விடுத்துள்ள செய்திவருமாறு:-

தைப்பொங்கற் பெருநாள் தமிழ்க் குடிமக்களின் தனிப்பெருந் திருநாள். புதுநெல் கொண்டு புதுப்பானையில் இட்டுப் பொங்கல் வைத்துப் போற்றி மகிழும் இந்நன்னுள் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்யும் இன்பப் பெருநாளாகும்.

தமிழருக்கே உரித்தான இப்பொங்கற் திருநாளில் உழவரையும் உழைப்பையும்போற்றித் துதி பாடுவோம். இன, மொழி, மத பேதமின்றி தேசிய நோக்குடன் உணவுப் பொருள் உற்பத்தியில் சகலரும் ஒன்றுபட்டு உழைத்து நாட்டின் பண்டைய செல்வ நிலையினை மீண்டும் அடையத் திட சங்கற்பம் செய்து கொள்வோமாக. இன்றைய பொங்கற் திருநாளில் இல்லங்கள் தோறும் நிலவும் மகிழ்ச்சியும் குதூகலமும் வற்ருத நதியாகப் பெருகவும் பசியும் பிணியும் அறவே நீங்கிச் செல்வம் கொழிக்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.''





## சாவகச்சேரி எம். பி. பொங்கல் வாழ்த்து

''எமது மத்தியிலே வேரூன்றியுள்ள சில தப்பபிப்பிராயங்களாம் பழமையன கழிந்து புதியன புகுந்து நாமெல்லாம் ஒன்றுபட்டு ஒரே இன மக்களாக வாழ்வதற்கு உறுதி கொள்வோம். இன, மொழி, கலை, கலாசார உரிமைகள் யாவும் பெற்று தலைநிமிர்ந்து வாழ, தை வழிவகுக்கட்டுமே''

இவ்வாறு சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் விடுத்துள்ளபொங்கல் வாழ்த்தில் தெரிவித்துள்ளார். அவர் தெரிவிப்பதாவது:-

''தமிழினத்தின் தலைசிறந்த விழாக்களிலே பொங்கல் பண்டிகை முதன்மையானது. நேர்மை, ஒழுக்கம், தியாகம், பொது நலத் தொண்டு ஆகியவற்றைத் துணைக்கொண்டு, எமது இனத்தின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் நம்பிக்கை வைப்போம்.

பிறப்பினுல் சிறப்புடைய மனிதன், பின் தனக்குள் ஏற்றத்தாழ்வுகள் கற்பித்து பிரிவுகளுக்குள்ளாகாமல், பொங்கும் பால் மணம் பாரெங்கும் கமழும் இந்நாளில்பழையனவற்றை மறந்து புதியனவற்றை வரவேற்போம்.


பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.''

பூத்தது பொங்கற் புதுநாள்
புதுமைகள் புகுந்த பொன்னுள்
எங்கள் மகிழ்ச்சி என்றும் உங்களுளம்
தங்கி நிறைவுறவே
வாழ்த்துக்களைத் தருகின்றேம்
இன்றைக்கே
விஜயஞ்செய்யுங்கள்
உங்கள் இதயம் கவர்ந்த
நகைகளை
பெற்றுக்கொள்ளுங்கள்
தெய்வா
நகை மாளிகை
173, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 512.

அனைவருக்கும்
எமது
உளம்நிறைந்த
பொங்கல்
வாழ்த்துக்கள்!

உண்மைக்கு ஒரு நாள்
உயர்வுக்கு ஒரு நாள்
உழவுக்கு ஒரு நாள்
உழைப்புக்கு ஒரு நாள்
பொங்கல் திருநாள்
இப்பொங்கல் திருநாளில்
எங்கள் வாடிக்கையாளருக்கும்
அன்பர்களுக்கும் எமது பொங்கல்
நல்வாழ்த்துகள் உரித்தாகுக!
ரொலறம்ஸ்
46, பிரதான வீதி, போன்: 7099 யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!
நீடித்து
உழைப்பதில்
நிகரேதும்
இல்லாதது
யூ ஆசா
பற்றறிகளே




வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
துரை அன் கோ
23/3 ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்

Ganeshons Beauty House, Chunnakam
தைத்திருநாள் - தமிழ்ப்பொங்கல் - வாழ்த்துக்கள்!
கணேசன் அழகு மாளிகை
சேர் பொன் இராமநாதன் வீதி, சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் தனிப்பெருநாள்

— ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் —

(காஞ்சிபுரம்தொண்டைமண்டலஆதீனகுருமகாசந்நிதானம்)

'பொங்கல்' என்பது அகத்திலும் புறத்திலும் நிகழும். அகப்பொங்கலைப் புறப் பொங்கலாற் காட்டும் பாங்கே வரும் பொங்கற்றிருநாள். அத்திருநாள் தமிழர்க்குத் தனிப் பெருநாள். அத்தமிழருள்ளும் உழவர் (உழுதுண் போர் உழுவித்துண்போர்)க்குச் சிறப்பின் உரிய திருநாள்.

ஆண்டுமுழுவதும் வாழ்தலுக்கு வழிவகையாய் உயிர்நாடியாய் உள்ள பெருமையுடைய திருநாள் பன்னிரண்டனுள் சிலவேயாகும்மார்கழியும்தையும் அவை. மார்கழித்திங்களில் மக்கள்மனத்துயரின் நீங்க ஐப்பசி முதலிலேயிருந்து தண்ணீரில் வைகறையில் குளிக்கத் தொடங்கிப் பனியை வென்று நட்பாகிக் கொள்கின்றனர். அவர்கட்கு மட்டும் பனி பிணியாவதில்லை வெந்நீர் வெய்யோர்க்குப் பனி பெரும்பகையாகி நோய் ஆக்கி இறக்கும்வரையிலும் இடர்ப்படுத்துகின்றது. 'பனிக்காலம் நன்று' என நம் நாவலர் பெருமானுர் திருவாதிதில் வந்ததாகச் சொல்லும் உண்மையை எல்லாரும் அறிவர் பனியிலும் ஆலகால விடம் நன்று எனின் அப்பனி எத்துணைக் கொடியது? அதனை அளவிடற்கரிதன்றோ? பெருந்துயர் விளைக்கும் பனி வெம்மையை விடியலில் அதனொடு கலந்த நீர்த்தன்மையால் நீக்கிக் கொள்வதே ஆறறிவு பெற்றமைக்குத் தக்கது. ஆறறிவும் ஆரு அறிவும் வேறுபட்டன. ஆருஅறிவு காலை குளியலையும் அதன் பயனையும் அறியாது. ஆரு நீரையன்றித் தண்ணீரை நாடாது.

ஐப்பசிமுதல் தண்ணீரிற் குளிப்போர்க்குக்குளிர் நட்பேயாகும். ஆதலின் மார்கழிக் குளிரைமகிழ்ந்து கொள்ளும் வன்மை அவர்க்கு எளிதிற் கிடைத்து விடுகின்றது. அவ்வன்மையால் ''பைங்குவளை .........எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த பொங்கும் மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து பாய்ந்து'' சங்கமும் சிலம்பும் கலந்துஆர்ப்பப் பலவும் பொங்கக்குடையும் புனலும் பொங்கப் பாய்ந்து ஆடும்படி செய்து வாழ்விக்கின்றது. இருஞ்சுனைநீர் ஆடல் இயல்வதன்று. உடையான் பொற்பதம் ஏத்தி 'எய்யாமற் காப்பாய்' என்று வேண்டினார்க்கு எளிதின் இயல்வதொன்று. நீராடும் போது காக்கையைப் போன்று ஆடாது அந்நீர்க் உருவாய் சிவசத்தியாகிய நம்மை வளர்த்து எடுத்த பொய்வளை தன் பாதத் திறத்தைப் பாடியாடவேண்டும். அன்பர்க்கு முன்னியவளாய் நமக்கும் முன் சுரக்கும் (நம்மையாளுடையாள்)இன்னருளே அந்நீர் என்பது, அரி அயன் அமரர்பாலும் அன்றிவேறு எங்குமே இல்லாத இன்பத்தை அந்நீராடும் அன்பர் அடைவதை நோக்கி அடையாலாம்.

மார்கழித் திங்கள் முடிவில் தைப்பொங்கள் எய்துகின்றது. பொங்கலைப் பெறு உடல் நலம்பெற்றவர்க்குத் தைநலம் செய்யுமோ? நைவலம் இன்றித் தைவளம் எய்தவேண்டின் ஐப்பசி முதலாகவே பனிப்பகையை வென்றும் அப்பகையை நட்பாகக் கொண்டும் ஒழுகும் பண்புடையார்க்கே தைப் பொங்கல் முழுநலம் உண்டாக்கும்.

அப்பொங்கல் வென்ருல் நமக்கு விளைகின்றது? இதுவே முக்கிய வினு? இதற்கு விடை பொங்கல் விழாவை ஆராய்ந்தால் நன்கு கிடைக்கும்.

புதுநெல்வருவாய் வரும் காலம் எது? கவிவருவாய்க்கு அடி எது? அதனெடு அவ்வருவாய்க்கு உபசரணமாய் நின்றது எவை? வான் முகிலும் வானவர் கோனும் வானிரவியும் மாடும் கன்றும் இல்லையே, நெல்வரவு நல்வரவாகவும் பல்லவராகவும் கூடுமோ! கூடாது, நன்றியறிதலிற் சிறந்த செந்தமிழ் மக்கள். உய்தியில்லாப் பாவத்தின் அஞ்சிவாழ்பவர்கள். புதுநெல் வருவாய்க்கு முக்கிய ஹேதுக்களாக விளங்கும் அவற்றைப் போற்றிவருவர் ஆயினர். அப்போற்றும் செயலே பொங்கற்றிருநாள் தைத்திங்களின் முன்னையதிங்களை வான்முகில் வழிபாட்டுக் காலமாகக் கொண்டு முறைப்படி வழிபட்டனர். மார்கழிமுடிவிலே அம்மழை முதல்வனை மேதவாகனனை போதியை இந்திரனை வழிபட்டனர். அவ்வழியிலே 'போகிபண்டிகை' எனப்படுகின்றது மழைக்குத் தனிக் காரணன் சூரியன் அவனை அடுத்தநாளில் தைத்திங்களின் தலைநாளில் வழிபட்டனர். அன்று படைக்கும் படையலில் 16 இலை இருக்கும். மடங்களில் இன்றும் அதனைக் காணலாம், உண்டானபோது கோடானு கோடி' என்ற தற்கியையச் செல்வர் வீட்டில் அவ்வழக்கம் இப்போதைய பழக்கத்திலும் உளது. கதிரவன் வழிபாடுவதும் முதல்நாளில் நிகழ்கின்றது, இரண்டாவது நாளில் மாடு [செல்வங்)களுக்கு வழிபாடு. மூன்ருவது நாளில் எதிர்கால மாடுகளாக வரவாழும் நிகழ்காலக்கன்றுகளும் வழிபாடு செய்கின்றனர். மக்கள் இம்மூன்றும் முறையே பொங்கல் என்னும் பொதுவும் மாட்டுப்பொங்கல் கன்று பொங்கல் என்னும் சிறப்பும் ஆகப்பெயர் வழக்கம் யேற்பட்டது. இப்பெயர் வழக்கத்தின் காரணம் தெரியாது, கன்று பொங்கலைக் காணும் பொங்கலாக்கிவிட்டனர். தமிழகத்தில் கன்று பொங்கல் நாளின் இரவிலும் தொடர்ந்து சிலநாளிலும் முதியோர் வாழ்த்துப்பெற இளையோரும், நல்லோர் வாழ்த்தை நண்ணப் பல்லோரும் அவரவர் இருக்கையுற்றுககண்டு கும்பிட்டு வாழ்த்துப்பெறவுண்டு காலக்கேட்டால் அது குறைந்துவருகின்றது. உடையாரை உடையாரை அடியர் காண்டல் மட்டும் வாழ்வழி வகை நோக்கியதாய் நடைபெறுகின்றது தமிழர் புத்தாடையுடுத்தல் முதலியன பொங்கலின் குறிகளாகும். இந்திர விழாவும் கதிரோன் வழிபாடு மாட்டுப்பொங்கலும் கன்று பொங்கலும் மிகப்பழங்காலத்துத் திருநாள் என்பதைச் சிலம்பணி தமிழ்த்தாய் நலம்பிறவிக்காத்து வருகின்ருள் மழைபெயில் நின்றுவிடலால் வானத்தைக்கண்டு தோகையை விரித்து மிக்க வோகை (உவகை) யொடு ஆடும் மயில் இளைப்பாறும் காலம் தைத்திங்களின் முதலில் அதனுல் அம்மயிலை அந்நாளில் வாழ்த்தும் நன்றியைத் தமிழர் மறந்திலர்.

(3-ம் பக்கம் பார்க்க)

# மங்களமான பொங்கல் நாள்!

-பண்டிதர் ஆசிநாதர்-

பொங்கல் தினமாம் பண்டிகையே
புவியிற் றமிழர் தனிப்பெருநாள்
தங்கத் தமிழர் பண்பாட்டின்
தத்துவங் காட்டும் தனித்திருநாள்
மங்காத் தமிழர் விவசாய
மகிமை விளக்கும் மாபெருநாள்
பங்கம் அடையாத் தமிழினத்தின்
பக்குவம் குறிக்கும் பாக்கியநாள்

0 0 0

பாலும் அரிசி சர்க்கரையும்
பழமும் கரும்பாய்ப் பொங்குவதில்
மேலாம் வாழ்க்கைக் குறிக்கோளும்
மேன்மை யுற்றே விளங்கிடுமே
சாலக் கூர்ந்து கவனித்தால்
சகல கருத்தும் தெளிவாகும்
கோலும் கொடியும் போற்றமிழன்
வாழ்வும் மனமும் பொங்கிடட்டும்!

0 0 0

பொங்கல் நாளின் தத்துவங்கள்
புகட்டுந் தமிழர் மனமெல்லாம்
பொங்கி நலத்தால் வழிந்திடுக!
போதும் மட்டும் பொலிந்திடுக!
மங்கா வாழ்வு மலர்ந்திடுக!
மாருப் பண்பும் சிறந்திடுக!
மங்கள மாக வாழ்வென்றும்
மகிழ்ச்சி மேவிப் பொங்கிடுக!

எல்லோர்க்கும் எமது அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!

றட்ஜ் சைக்கிள்
ரேட் மாஸ்டர் சைக்கிள்
சைக்கிள்டயர்-ரியூப்புகள்
மில்லர் டைனமோக்கள்
சைக்கிள் உபகரணங்கள்

மின்சார மீற்றர்கள்
மின்சார விசிறிகள்
(கூரை - Ceiling மேசை-Table)
மின்சாரஸ்திரிக்கைபெட்டி
மின்சார கேத்தில்
மின்சார தண்ணீர்பம்புகள்

மாபிள் ஸ்நான
அறை சாதனங்கள்

எஸ்லோன்
பி. வி. சி. பைப்புகள்
கூரைப் பீலிகள்
மின்சார அமைப்புக்
குழாய்கள்

பலரக மின்சார வயர்கள்
ஆமச்சர் வைன்டிங்
வயர்கள்
ஆட்டோ மோபிள்வயர்கள்

நிதான விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

141 143, ஸ்ரான்லி ரேட். போன்: 7016 யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கும் நலன்தரும் தைப்பொங்கல்

— மு. சின்னத்துரை பி. ஏ. --

ஏர்த்தொழில் நாட்டினில் தெம்புற- ஏழையும செல்வரும் இங்கிதமாக இசைந்துள்ளம் இன்புற- எங்கணும் புதுவளம் நிறைந்து தங்கிட, மங்கலமாகக் கொண்டாடும் தமிழர்களின் தனிவிழா தைப் பொங்கலாகும். தமிழர்களின் பெருவிழாக்களான தீபாவளி, தைப்பொங்கல் என்பனவற்றில் தைப்பொங்கல் விழாவைத் தமிழர்களின் தனிவிழாவாக - திருவிழாவாகக் கொள்ள பல்வேறு காரணங்கள் உண்டு.

## தைப்பொங்கல் அம்சம்

மக்களிடையே புதிய எழுச்சியை உண்டுபண்ணும் தைப்பொங்கல் விழா ஆண்டு தோறும் தை மாதம் முதலாந்திகதி கொண்டாடப்படும். உலைநீர் சுவறப் பதமாக பச்சை அரிசியில் வடிக்கப்படாது பொங்கப் படுவதே தைப்பொங்கல் ஆகும் இப்பொங்கலில் பால், சர்க்கரை என்பன சேர்க்கப்படும். பின் பழம், கரும்பு ஆகியனவற்றுடன் கடவுளுக்குப் படைக்கப் படும். இவ்வாறு நடைபெறும் தைப்பொங்கலின் பிரதான அம்சம் கடவுளை மனத்தால் வரவழைத்து கடவுளுக்கு மனத்தால் கொடுத்து ஏனையவற்றை விருந்தினர்களுடன் உண்டு களிப்பதாகும். இப்பொங்கல் வீடுகளிலும், கோவில்களிலும் சூரிய உதய நேரத்தில் நடைபெறும்.

அடுத்த (இரண்டாம்) நாள் மாடுகள் அடைக்கப் படும். பட்டி-மேய விடப் படும். பிரதேசம் - மாட்டுத் தொழுவம் ஆகிய இடங்களில் பொங்கப்படும். இது மாட்டுப்பொங்கல் எனப்படும். மாடுகளை இந்நாளில் குளிப்பாட்டி மாலை அணிவித்தும், உண்பித்தும் வணங்கியும் அதன் கட்டுக்களை அவிழ்த்து விட்டும் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படும்

## காட்டுப்பொங்கல்

ஞாயிற்றின் வெம்மையான கதிர்களைத் தாங்கி ஆடுமாடுகள் ஆதியன உலாவி உணவு உண்ணவும், பனிக்குளிரால் நடுங்கும் பறவைகள் மரப்பொந்துகளைப் பெறவும் மக்கள் வேலை செய்து களைக்கும் போது இளைப்பாற நிழல் கொடுத்தும் மக்களுக்கு விறகுகளைக் கொடுத்தும் வரையாது வானம் வழங்கவும் காடுகள் உதவுவதால் வனதேவதைகளுக்கு தங்கள் அன்பை நினைவு கொள்ளுமுகமாக பொங்கப்படுவதே காட்டுப் பொங்கல் எனப்படும். இவ்வாறு காட்டுப்பகுதியில் பொங்கி தேவதைக்குப் படைத்து எஞ்சியதை உண்பதை வன போசனம் என்பர். இக்காலத்தில் மாரியம்மன் என வழங்கப்படும் தேவதையே அக்காலத்து வன தேவதை என்று கூறுவாருளர்.

## இயற்கைக் கடவுள்

இயற்கையோடு இயைந்த இன்ப வாழ்வு வாழ்ந்த பண்டைத் தமிழர்களின் தெய்வங்களுள் இயற்கையோடு ஒட்டிய தெய்வங்கள் அதிகம் எனலாம். இயற்கையோடு ஒட்டி கடவுளை வணங்கியமை பண்டைய மனித வரலாற்றில் தெய்வ வழிபாடு பற்றித் தெரிந்துகொள்ளும் பொது அம்சமாகும். கடல், மலை, காற்று, தீ, ஞாயிறு ஆதியன இயற்கையோடு ஒட்டி வழிபட்ட தெய்வங்களில் பிரதானமானவை. வயல், தோட்டம், மாடு ஆதியன பண்டைத் தமிழர்களின் உழைப்புப் பெறும்-பயனைப் பெற்றும் செல்வங்கள் ஆகும். இச்செல்வங்கள் பெருகக் காரணமாக இருக்கும் மழையை கொடுத்து எல்லாவற்றுக்கும் மேலாக நின்று மக்கள் இருள் அகற்றி, பொருள் வளம் பெருக்கி, உயிர் வளம் பொலிய ஞாயிறு தான் நின்று அருள் சுரத்தலால் அதனை மேலாகப் போற்றினர்.

தைப்பொங்கலைப் பற்றி பண்டைத்தமிழ் இலங்கியங்களில் குறிப்புகள் இல்லாவிட்டாலும் இயற்கையைத் தெய்வமாகப் போற்றினர் என்பதற்குச் சான்றுகள் உண்டு. இறைவன் இயற்கை வடிவாக நின்று மக்களுக்கு அருள் சுரக்கின்றான். சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்து பாட வந்த இளங்கோ இயற்கையைக் கடவுளாகப் போற்றுகின்றார். முத்தொழிலைப் புரியும் கடவுளின் தோற்றப்பாட்டை இயற்கையினூடு கண்டு தெளிந்தனர் பண்டைத்தமிழர். அழித்தல் தொழிலைச் செய்யும் கடவுளின் அம்சமாக ஞாயிற்றையும், காத்தல் தொழிலைச் செய்யும் கடவுளின் அம்சமாக மாடுகளையும் படைப்புக்கடவுள்களின் அம்சமாக நிலத்தையும் (காடு, வயல், தோட்டம்) கொண்டார்கள். எனவே தைப் பொங்கலை இயற்கையின் ஊடாக கடவுள் அன்பை வியந்து போற்றுவதாகவும், இயற்கையின் சிறப்பை உதவிகளை நினைவு கூர்வதாகவும் புதிய பருவத்தின் தொடக்கத்தினை உணர்த்துவதாகவும், மக்களின் உத்வேகத்தைத் தட்டி எழுப்பும் விழாவாகவும் கொள்ளலாம்.

## தைப்பொங்கல் விழாவின் சிறப்பு

தைமாதம் இயற்கையின் எழில் கோலத்தை எடுத்தியம்பும் மாதமாகும். காடுகள் செழித்து வளர்ந்து காணப்படும் புல்கள் நன்கு வளர்ந்து பச்சைபசேரென்று காணப்படும்.

இந்நிலையில் வயலில் விளைந்த நெல் கமக்காரனின் பொருளாதாரத்தை வளம் படுத்த காத்து நிற்கும் அதே நேரம் இம் மேழி பிடித்தவனின் கையை வேல் வேந்தனும் நோக்கி நிற்பான்.

இத்தகைய மாதத்தின் பிறப்பு மக்களின் மகிழ்ச்சியின் பிறப்பாக பழையன கழிதலும் புதியன புகுதலுமாக அமைந்து மனதிலே புத்துணர்ச்சியையும் செயலிலே புதிய உத்வேகத்தையும் கொடுப்பதாக தைப்பொங்கல் அமைகின்றது. இவ்விழாவில் நடைபெறும் பொங்கலில் பால்பொங்கி வடிவது போல மக்களின் மகிழ்ச்சி அவர்களின் வாழ்வு பொங்கி வடிய வேண்டும் என்பதே முக்கிய அம்சமாகும்.

தைமாதம் மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் பிற கொண்டாட்டங்கள் நடை பெறும் மாதம் கூட தைபிறந்தால் வழி பிறந்து பல திருமணக்கொண்டாட்டங்கள் தைமாதத்திலே இடம் பெறுகின்றன.

தைமாதத்தில் குளம், குட்டைகள் நிரம்பிக்காணப் படுவதால் மக்கள் மகிழ்ச்சியாக நீராடுவர். இதில் பெண்கள் முக்கிய பங்கு எடுத்துக் கொள்ளும் இந் நீராடல் தைநீராடல்என்பர்

[இன்ன பண்பின் நின்
தைந நீராடல் நீதக்காய்
தைந்நீர் நிறந் தெளிந்தா
யென் மாடும்]

என வரும பரிபால் அடிகள் இதனையே உணர்த்துகின்றது.

## தமிழர்களின் தனிச்சிறப்புக் கொண்ட விழா

தைப்பொங்கல் தமிழர்களுக்கு உரிய தனிச்சிறப்பான விழா எனப்பலர் கூறுகின்றார்கள். தமிழர்கள் ஒரு காலத்தில் புதிய ஆண்டின் பிறப்பாக தைப்பிறப்பைக் கொண்டனர் என்பதற்கு வட மொழி நூல்களில் சில சான்றுகள் உள. சூரியன் உச்சம் கொடுக்கும் கால

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழரின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'மயிலாறு' என்றது யார்க்குத் தெரியாது? 'பொங்கலோ பொங்கல்' உள்ளம் பொங்க உரைபொங்கஉடல் பொங்க நன்னீர் காவிமஞ்சட்கொத்துடன் நெஞ்சக் களிப்புற்று உயிரும்பொங்குகின்றது. உயிர்க்குயிராய சிவமும் பொங்குகின்றது. அதனால் உலகும் பொங்குகின்றது, உவாவிற்பொங்குங் கடலது பொங்கலும் இதற்கு ஈடாகுமோ?

இப்பொங்கலின் பெருமையைப் போற்றக் கருதி ஒரு மலர்வெளியிடும் 'ஈழநாடு' என்றும் நன்றே எங்கும் பரவுக சிறந்துலவுக.


**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!**
**அனைவர்க்கும் நம் வாழ்த்துக்கள்!!**

புத்தாண்டில் புதுச்செய்தி!
நாட்டவர்க்கு நற் செய்தி ! !

ஈழத்து நங்கையர் இதயம் இன்புற
வாழ்க்கை வலியுற
பணமும் பவுனும் பயனைத் தந்திட

"தம்பி அன் கோ"வில்
பணம் அல்லது பவுண் திட்டத்தில் சேரவும்.

விளக்கம்:

(1) இன்று பவுண் ஒன்றின் விலை ரூபா 140/- ஆனால்
(2) 5 பவுண் விலை ரூபா (700/-)எழுநூறையும் தம்பி அன் கோ. வில் கொடுத்து பற்றுச்சீட்டு வாங்கவும்.
(3) எந்த நேரத்திலும் 8 நாள் அறிவித்தலில் பணம் அல்லது பவுண் எடுக்கலாம்.
(4) பணமானல் ரூபா எழுநூறும் வருடம் 10 சதவீத வட்டியும் வாங்கலாம்
(5) பவுனானல் 5 பவுணும் வருடம் 8 சத வீத வட்டியும் வாங்கலாம்
(6) ஆகையால் தம்பி அன் கோ.வில் பணமும், பவுனும் நாட்டவர்க்கு நன்மையை நல்கும்.

மறுவிபரங்கட்கு:

**தம்பி அன் கோ.**

திருநெல்வேலி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.



நண்பர்களுக்கும், அன்பர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எம் இதயம் கனிந்த
**பொங்கல் வாழ்த்துக்கள்**

அரிய சேவையால்
லட்சக்கணக்கான மக்கள் உள்ளங்களின்
அன்பையும் அமோக ஆதரவையும் பெற்ற
நகை வியாபாரிகள்

**ஏ. கே. எஸ். அன் சன்ஸ்**

நகை மாளிகை
63, 65, கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்.
போன்: 519



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
**பொங்கல் வாழ்த்துக்கள்**

சிறந்த முறையில் உத்தரவாதத்துடன்
உங்கள்
டயர்களைப் புதுப்பிப்பதற்கு
சிறந்த இடம்

**நோர்தேண் இன்டஸ்றீஸ்**

8/1, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்
போன்: 7158


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய புகழ் நூல்களு

‘சொல்லும் பொருள் எல்லாம் ஆனார் தாமே
தோத்திரமும் சாத்திரமும் ஆனார்தாமே’
— திருநாவுக்கரசர்

தமிழ்நாடு எத்தனையோ பலவகைகளில் தனிப்பெரும் சிறப்புடைதுயசெவ்வியமதுரம் சேர்ந்த நற்பொருளிற் சிரிய கூரிய திஞ்சொற் கவிதை’களால் அமைந்த அழகிய இனிய தேர்த்திர நூல்களையும், அரிய பெரிய சாத்திரங்களையும் ஏராளமாகப் பெற்றிருப்பதும், தமிழ் நாட்டின் பல வகைச் சிறப்புகளில் ஒன்றுகும். ‘‘இங்கிலாந்து நாடு வேறு பிறிது எதனுலும் அன்றித் தனது கவிதைகளினுலேயே இத்துணைச் சிறந்த புகழ் வாய்ந்ததாக விளங்குகின்றது’’. என மேத்யூ ஆர்னல்டு என்னும் ஆங்கில அறிஞர் குறிப்பிடுகின்றார். அம்முறையில், தமிழ் நாட்டிற்குத் தனிப் பெரும் சிறப்பை விளைவித்துப் புகழ் பரப்பிக்கொண்டிருப்பன, சாத்திரங்களும் தோத்திரங்களுமாக அமைந்த பல தண்டமிழ்க் கவிதை இலக்கியங்களே எனலாம்.

தமிழ் நாட்டில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், இசுலாமியம், கிறிஸ்தவம் போன்ற பல சமயங்கள், நலமுறை வளர்ந்து நிலவி வருகின்றன. அச் சமயங்களுள் ஒவ்வொன்றுக்கும் உரியனவாய், எத்தனையோ பல புகழ்நூல் தோத்திரநூல்) களும், பொருள் நூல்(சாத்திர நூல்) களும் விளங்கி வருகின்றன அவைகள் அனைத்தையும் பற்றி, இச் சிறு கட்டுரையிற் குறிப்பிடுதல் இயலுவதன்று, ஆதலின் தோத்திரம், சாத்திரம் எனத் தொன்று தொட்டு வரையறைசெய்து போற்றி வழங்கி வரப்பெறும் சிறப்புடையசைவத் தமிழ் இலக்கியங்கள், ஒரு சிலவற்றைப் பற்றி மட்டும், இயன்ற அளவில் சுருக்கமாக இக் கட்டுரையில் காண்போம்.

**தோத்திரங்கள்**

தமிழ் மொழிக்கண் உள்ள அளவற்ற பல தோத்திர நூல்களுள், மிகவும் பழமையும் பெருமையும் தெய்வீகமும் வாய்ந்து திகழ்வனவாய்த், தமிழகச் சான்றோர் பெருமக்களால் போற்றிப் பாராட்டப்பெறுவன, பன்னிரு திருமுறைகள் எனப் படுவனவாகும். கலையறிவு உணர்வால்மட்டுமே பாடப் பெறும் ஏனைய பிற உலகியற் கவிதைகளைக் காட்டிலும், இறையருள் உணர்வாற் பாடப்பெற்ற திருமுறைகள் ஆகிய நிறைமொழிப் பாடல்கள், எல்லா வகையாலும் ஏற்றம் மிக்குடையன. பிற்காலத்தே தோன்றியருளிய ஆயிரமாயிரம் அறிஞர்களும், ஆன்றோர்களும் சான்றோர்களும் ஆகிய அனைவரும், திருமுறைகளைச் செவ்வியின் ஓதியே சிறப்புற்று உயர்ந்து உய்ந்தனர் என நாம் துணிந்துகூறலாம்.

**மறுமலர்ச்சிப் புதுவகை நூல்கள்:**

சங்க காலத்திற்குப் பின்னர் சில நூற்றுண்டுகள் (கி பி 300-600) தமிழ் நாட்டில் நிலவிய இருண்டகாலச் சூழ்நிலைகளால், மங்கி மழுங்கிக் கிடந்த தமிழ் மொழியும், இலக்கியமும் கவிதையும் கலைகளும், தமிழர் வாழ்வும் ஆகியவை யெல்லாம், திருமுறைகளால் தான் மீண்டும் தழைத்துச் செழித்துச் சிறப்பெய்தின. தமிழகம் பல்லாற்றானும் புத்துயிர்ப்பும்புத்துணர்ச்சியும் பெற்று வளர்வதற்குத் திருமுறை ஆசிரியர்களே காரணர்கள் ஆவர். திருமுறைகளை ‘‘மறுமலர்ச்சி இலக்கியங்கள்’’ என நாம் குறிப்பிடுதல் பொருந்தும். சங்ககால நூல்களின் நடையும் போக்கும் கருத்தும் அமைப்பும் திருமுறைகளின் நடையும் போக்கும் கருத்தும், தனித்தனியே வெவ்வேறுகஅமைந்த மேம்பாடுடையனவாகும்.

திருமுறைப் பாடல்கள், நாட்டின் பல பகுதிகளிலும் மூலை முடுக்ர்களிலும் சென்று பாடப்பெற்று, மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு பரவி நின்ற மாட்சிமை வாய்ந்தவை ஆதலின் அவற்றை ‘மக்கள் இலக்கியங்கள்’ எனவும் நாம் குறிப்பிடலாம். திருமுறைகளின் சொல் புதிது; பொருள் புதிது; நடை புதிது; சுவை புதிது! இவ்வாற்றுல் அவற்றைப் ‘புதுமைப் பேரிலக்கியங்கள்’ எனக் கூறுதலும் பொருந்தும் திருமுறைகளின் அருமை பெருமைகளுக்கு அளவேயில்லை.

**பன்னிரு திருமுறைகள்**

திருமுறைகள் பன்னிரண்டு என்று வரையறை செய்யப் பெற்றுள்ளன. அவற்றுள் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடியனவாகும். இவைகள் தூய சிறந்த நடை நலனும், மிகுந்த இசை இனிமையும், உயர்ந்த கலைத்திறனும் எழில் கனிந்த இயற்கைப் புனைவுகளும் செறிந்து. இளமைக் குரிய பெருமித உணர்ச்சியும் வீறும்பெற்று, ஒப்புயர்வற்றுப் பொலிந்து விளங்குகின்றன.

திருநாவுக்கரசர் பாடல்கள் மூன்று நான்கு ஐந்தாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. அறிவு முதிர்ந்து, அனுபவம் பழுத்து, தத்துவம் செறிந்து, உருக்கம் மிகுந்து மக்கள் வாழ்க்கைக்கு உறுதிபயக்கும் உயரிய கருத்துக்களைத் திட்ப நுட்ப முறவும் சுவை பெருகவும் திருநாவுக்கரசரின் பாடல்கள் அறிவுறுத்துகின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்தது, ஏழாம் திருமுறை, கலை யழகும், இசை இனிமையும், நகைச் சுவை நலமும் பிறவும் கலந்து நிறைந்து, மனித வாழ்வியலின் அனுபவவாய்மைகளைத் திறம்பட விளக்குகின்றது, ஏழாம் திருமுறை

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூல்கள் இரண்டும், எட்டாம் திருமுறை எனப்படும். இவற்றுள் திருவாசகம் அழகிய இனிய கருத்துச்செறிவும், அயரா அன்பு நலனும், இறையருளுணர்வில் ஆரா இயற்கை அவாவும் வேட்கையும் மிகுந்து. எளிமை இனிமை தெளிவு முதலிய சிறப்பியல்புகள் அமைந்து, கல்லையும் பிசைந்து கனியாக்க வல்ல உருக்கமும் நெகிழ்ச்சியும் சிறந்து, ஒப்புயர்வில்லாத பக்திப் பெருநூலாக ஒளிர்கின்றது. இறையருளைத் தேடி அலைந்து, முயன்று பெற்று உய்யும் ஓர் உயிரின் பலதிற உள்ளுணர்ச்சிகளின் வளர்ச்சிப் படிநிலைகளைத் தெளிவுற விளககிக்காட்டும் திறனில், திருவாசகம் போலச் சிறந்த நூல் வேறென்றில்லை. தன்னை ஓதுபவர்களின் சிந்தையெல்லாம் தெளிவித்துச் சிவமாக்கி உய்விக்கவல்ல சிறப்பினது திருவாசகம்!

திருச்சிற்றம்பலக் கோவையார், சங்ககால நல்லிசைப் புலவர் பெருமக்கள் பாடிய அகப்பொருட் காதல் உணர்ச்சியோடு அருட்பொருளாகிய கடவுளுணர்ச்சியையும் கலந்தியைத்துப் பிணைத்துப் பாடிக், கலைநலமெலாம் கனிந்து, மெய்யுணர்வுக் கருத்துக்கள் செறிந்து திகழ்கின்ற செந்தமிழ்ப் பெருங் கருவூலம் ஆகும். இதனைக் குமரகுருபர அடிகள் ‘காமம் சான்ற ஞானப் பனுவல்’ எனப் புகழ்ந்து பாராட்டிப் போற்றியுள்ளார். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் பாடல்கள் ஒன்பதாம் திருமுறையாக வழங்கப்பெறும். திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி கண்டராதித்த தேவர், வேணாட்டிகள், திருவாலி அமுதனார் புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் சான்றோர்கள் ஒன்பதின்மரும் பாடிய பாடல்களின் தொகுதியே ஒன்பதாம் திருமுறை. இதன்கண் கண்டராதித்த சோழர் கி. பி. 949-957) பாடிய பாடல்களும், முதலாம் ராஜராஜசோழன் (கி. பி. 985-1014) கட்டிய தஞ்சை இராசராசேச்சுரம் பற்றிய பாடல்களும், இராசேந்திர சோழன் (கி.பி.1012-1044) கட்டுவித்த கங்கைகொண்ட சோழேச்சுரம் பற்றிய பாடல்களும் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் நுண்பொருள் மறைநூல், பத்தாம் திருமுறையாகும். ஆராய்ச்சிஅனுபூதி என்னும் இறையருட் பேற்று இயல் நெறியால் நம்ம[...] இறைவனை அடைந்து[...] மாறு பலதிறயே[...] பயிற்சி முறைகளையும்[...] தெழுத்து முதலிய[...] பல மந்திரங்களை[...] அவற்றை உருவேற்[...] குரிய பலவகைச் ‘[...] அமைப்புக்களையும். [...] துயர்ந்த தத்துவ [...] பொருள்களையும், அ[...] இனிய உலகியல் பீதி[...] துக்களையும், ஓதற்கு [...]

**புலவர்**
**ந. ரா. முருகவே[...]**
**எம். ஏ., எம். ஓ. [...]**
(சென்னை ‘திருக்கோயில்’ [...]

வாய் உணர்தற்கு[...] வாய்ச் சிந்தனைக்கு[...] வாய், உள்ள சிறந்த [...] களால் திறம்பட வி[...] கின்றது. இதனை ‘[...] முதல் நான்கும் மலர்[...] திரு மந்திரமாலை’

# நமக்கொரு [...]

-இ. நாகராஜன்

பொய்போல் கசக்கின்ற
பொங்கலைசேர் ஆழியுப்பை
வெய்யோன் உறிஞ்சிவிட்டு
மேதினியோர் வாழ்வதற்காய்
மாரி மழையாக்கி
வழங்க, வரட்சியுற்ற
ஏரி நிரம்பிப்பின்
இழியும், புனலருந்தும்
காவின் கடிமலரின்
கந்தம் தனைச் சேர்த்து
பாவோ டிளந்தென்றல்
பரப்பும் பலதிசையும்

000

ஓட்டைக் குடிசையிலே
ஒதுங்கியுள்ள நல்லுழவன்
வாட்டும் துயர்நீக்கி
‘‘வாழி உலகமென’’
மேழி பிடித்துழுவான்;
விதைப்பான்; பயிர் விளைய
ஆளும் வயலையெழில்;
ஆர்த்துநிற்கும் புள்ளினங்கள்.

000

முற்றிக் கதிர்விளைந்து
முதிர்ந்துமணி நெல்லாக
பற்றிப் பிடித்தரிந்து
பக்குவமாய் தன்னில்லில்
சேர்ப்பான்; உளமிசையத்
தேசத்துக் கேயளித்து
தீர்ப்பான் வறுமைநிலை;
சிந்தை இதம்கொள்ள
பட்ட துயர்மறந்து
பலர்வாழும் இன்பத்தால்
கட்டில் களிகொண்டு
கன்னற் கவியிசைப்பான்.

000

உப்பு கடல்நீரை
உண்டிவ் வ்லகத்தில்
கப்பும் பசிதுடைக்கக்
காலம் அறிந்தேநல்
மாரி வருவித்த
மாதொண்டன் வெய்யவனின்
பேரில் ஒரு பொங்கல்
பிரியத் துடன்வைக்க
பொன்னாய் ஒருநாளாய்
பொலிகின்ற தைமாத
முன்நாள் வரவதனை
முழுமனதாய் பார்த்திருந்தான்


ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்

கே.என்.எம். மீரன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்.

பொங்கல் வாழ்த்துக்கள்
ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளருக்கும்
பாவனையாளருக்கும் ஆதரவாளருக்கும்
எங்கள் உளம்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
பாலக்காடு
ஆர். வி. ஜி. பீடி
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்
போன்: 230
தந்தி: ஆர்விஜி
47, பீச் ரோட்,
யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எம[...]
ஞானம்ஸ் [...]
ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ளும் பொருள் நூல்களும்

...ல் நம்மனேர் ...னே அடைந்து உய்யு ...லதிறயோகப் ...முறைகளேயும் ஐந் ...து முதலிய அரிய ...ந்திரங்களேயும், ...ற உருவேற்றுதற் ...பலவகைச் 'சக்கர' ...ங்களேயும். சிறந் ... தத்துவ ஞானப் ...களேயும், அழகிய ...லகியல் பீதிக்கருத் ...யும், ஓதற்கு எளிய

புலவர்
...ா. முருகவேள்
...ஏ., எம். ஓ. எல்.
(...திருக்கோயில்' ஆசிரியர்)

...உணர்தற்கு, அரிய ...சிந்தனேக்கு இனிய ...ள்ள சிறந்த பாடல் ... திறம்பட விளங்கு ... இதனே 'ஞானம் ...ான்கும் மலர் நற் ...ந்திரமாலே' எனச்

சேக்கிழார் அடிகள், சிறப்பித்துக் கூறியருள்கின்றூர்.

பதினெஞன்ரும் திருமுறை, திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோனு, சேரமான் பெருமாள், நக்கீர தேவர், கல்லாடதேவர் கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமானடிகள், அதிரா அடிகள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பிகள் என்னும் பன்னிருவர் பாடியது; நாற்பது பனுவல்கள் கொண்டது. சங்ககால நூலாகக் கருதப் பெறுவதும், ஆசிரியர் நக்கீரஞர் பாடியருளியதும் ஆகிய திருமுருகாற்றுப்படை இதன்கண் சேர்க்கப் பெற்றுள்ளது. விநாயகரைப் பற்றிய புகழ்நூல்கள் இரண்டும் (மும்மணிக்கோவை, இரட்டை மணிமாலே) இதன் கண் இடம்பெற்றுள்ளன.

ஆசிரியர் சேக்கிழார் பெருமான் இயற்றியருளிய பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும் இது நாயன்மார்கள் எனப்படும் அறுபத்திமூன்று சிவனடியார்களின் வரலாற்றை அழகுற விளக்கியருளும் ஒப்புயர்வற்ற அருள் நூலாகும். கி. பி. 6-ம் நூற்ருண்டு முதல் 12-ம் நூற்ருண்டுவரையுள்ள தமிழகத்தின் சமய சமுதாய வரலாற்று நிகழ்ச்சிகளேயும் செய்திகளேயும் அறிந்து கொள்வதற்குப் பயன்படும் ஓர் அரும்பெரும் கலேக்களஞ்சியமாகப் பெரியபுராணம் அமைந்து திகழ்கின்றது. தமிழகத்தின் தேசிய காவியம் என்று பெரியபுராணத்தைக் குறிப்பிடுதல் பொருந்தும்.

மேற்குறித்த இப்பன்னிரு திருமுறைகளும், தமிழ் நாட்டின் புகழ்மிக்க புனிதப் பெறும் தோத்திர நூல்களாகும். இவற்றின் அடிப்படையில் தமிழகத்தில் எண்ணிறந்த எத்துணேயோ பல தோத்திர நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் அருணகிரிநாதர் பாடிய "திருப்புகழ்", இராமலிங்கர் அருளிய "திருவருட்பா" முதலியன மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

சைவசமயத்தின் பக்தி நெறிப் பாடல்களாகிய இத்திருமுறைப் பாடல்களின் சிறப்பியல்களே ஓர்ந்துணர்ந்து மேலேநாட்டறிஞர்கள் பலர் பாராட்டிப் போற்றியுள்ளனர்.

**சைவசித்தாந்த சாத்திரங்கள்**

இப்பன்னிரு சைவத் திருமுறைகளின் சிறந்த பெரும் பிரிவாகத் தோன்றியனவே, சைவசித்தாந்த சாத்திரங்கள் எனப்படும் இவற்றை "மெய்கண்ட நூல்கள்" எனவும் குறிப்பிடுவதுண்டு.

உந்தி களிறு உயர்போதம்
சித்தியார்
பிந்திருபா உண்மை பிர
காசம் - ளந்த அருட்
பண்புலினு போற்றி கொடி
பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்பம்
உற்று

1. திருவுந்தியார்:- திருவியலூர் உய்ய வந்த தேவர் இயற்றியது (கி. பி. 1147) இது தாழிசைகள் 45 கொண்டது. சமய அனுபவ உண்மைகளே விடுகதைகள் போல விளக்குவது 'உந்தீபற' என்னும் தொடர் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் வருவதனுல் இஃது இப்பெயர் பெற்றது.

2. திருக்களிற்றுப் பாடியார்: இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்ய வந்த தேவர் (கி. பி. 1178) திருவுந்தியாரைப் பின்பற்றி அதன் விளக்கமாக 100 வெண்பாக்களால் இயற்றப்பெற்றது. இதன் ஆசிரியர் தில்லேக்குச் சென்று கூத்தப்பிரானே வணங்கி இந்நூலே அங்குள்ள திருக்களிற்றுப் பாடி என்னுமிடத்தில் வைக்க, சிற்பவடிவில் இருந்த களிறு தன் துதிக்கையால் இந்நூலே எடுத்துக் கூத்தப்பிரானின் திருவடிகளில் வைத்து அதனுல் இந்நூற்கு இப்பெயர் வழங்கலாயிற்று. திருவாசகம், திருக்குறள் ஆகியவற்றின் பாடல்களே இந்நூலாசிரியர் விதந்தெடுத்து மேற்கோளாகக் காட்டிப் பாடியுள்ளார். நாயன்மார்களின் வரலாறுகள் பலவும் இதன்கண் எடுத்துப் போற்றப் பட்டுள்ளன.

3. சிவஞானபோதம்: சைவ சாத்திரங்களுள் மிகவும் தலைமை வாய்ந்தது. மெய்கண்டார் என்னும் சான்ருேர் (கி. பி. 1232) இயற்றியது. தன்னே ஓதுபவர்க்குச் சிவஞானத்தைப் போதிப்பதாகலின் இப்பெயர் பெற்றது. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளேத் தடுக்க நெறி பிறழாமல் விளக்குவது. பன்னிரண்டு சூத்திரங்கள் உடையது. திருக்குறள் ஆகிய தமிழ் வேதம் பசு, திருமூலர் திருமந்திரம் ஆகிய ஆகமம் அப்பசுவின் பால், அப்பர் சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரின் பாடல்களாகிய திருமுறைகள் அப்பாலின் நறுநெய்; மெய்கண்டார இயற்றிய சிவஞான போதம் அந்நெய்யின் இனிய சுவையாகும் என்று பல வகைகளில் இதனேப் பெரியோர்கள் பாராட்டியுள்ளனர்.

வேதம் பசு: அதன்
பால் மெய்யாகமம்; நால்
வர் ஓதும் தமிழ்; அத
னின் உள்ளுறும் நெய்;-
போதமிகு நெய்யின் உறு
சுவையாம் நீள் வெண்ணே
மெய்கண்டான் செய்த
தமிழ் நூலின் திறம்.

4. சிவஞானசித்தியார்: இது சிவஞானபோதத்தின் வழிநூல். அவர் தம் மாணவராகிய அருள்நந்தி சிவாசாரியார் இயற்றியது. ஓதுபவர்க்குச் சிவஞானம் சித்திக்குமாறு செய்வது. பரபக்கம் (301 செய்யுள்), சுபக்கம் (323 செய்யுள்) என்னும் இரு பிரிவுகளேக் கொண்டது. "பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போலும்" எனக் குரு ஞானசம்பந்தர், தாயுமானவர் முதலிய சான்ருேர்கள் இதனேப் போற்றியுள்ளனர். "சிவத்துக்கு மேல் இல்லே தெய்வம், சிவஞானசித்திக்கு மேல் இல்லே நூல்" என்பது பழமொழி.

5. இருபாஇருபஃது: இந்நூல் அருள்நந்தி சிவாசிரியர் தமது ஞாஞசிரியராகிய மெய்கண்டார் பால் வினவிய ஐயங்களேயும், அவற்றிற்கு அவர் கூறிய விடைகளேயும் சுருக்கித் தொகுத்துத் தரும் முறையில் 20 பாடல்களால் இயன்றுள்ளது.

6. உண்மை விளக்கம்: மெய்கண்டாரின் மாணவராகிய திருவதிகை மனவாசகம் கடந்தார் இயற்றியது ஆன்ம தத்துவம் - சுத்த தத்துவம் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் உயிரியல்பு - பதியியல்பு - ஐந்தெழுத்து நடராசதத்துவம் - அத்துவித முத்தி - குருலிங்கசங்கமவழிபாடு என்பவற்றை 53 வெண்பாக்களால் விளக்குகின்றது.

7. சிவப்பிரகாசம்: சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்கள் நால்வருள் ஒருவர் மறைஞானசம்பந்தர்! இது அவர்தம் மாணவர் தில்லேக் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் இயற்றியது. ஓதுபவர்பால் சிவத்தின் பிரகாசம் ஏற்படுமாறு செய்யும் இயல்பு பற்றி இப்பெயர் பெற்றது. சிவஞானபோதத்தின் சார்புநூல் பதி பசுபாச இலக்கணம். சகல கேவலநிலேகள் தத்துவத் தோற்றங்கள் முத்தி, பேதங்கள், அவத்தை நிலேகள் ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்மலாபம், முதலிய பலபொருள்களே விளக்குவது 100 பாடல்கள் கொண்டது

8. திருவருட்பயன்: திருக்குறளேப் பின்பற்றி அதன் நடையில் 100 குறள் வெண்பாக்களால் 10 அதிகாரங்களில் தத்துவப் பொருள்களே விளக்குவது உமாபதி சிவம் இயற்றியது. இறைவனின் திருவருளாகிய பயனே அடையச் செய்விக்க வல்லது.

9. வினுவெண்பா: உமாபதிசிவம் இயற்றியது. 13 வெண்பாக்கள் கொண்டது. தம்முடைய ஐயங்களேத்

(4-ம் பக்கம் பார்க்க)

# ...ரு பொங்கல்

...நாகராஜன்-

...ர்கழியாம் மாதமது
...றையவே வானகத்தில்
சீர் ஆர் தெளிவுடனே
சிரித்தான் பரிதியவன்;
செய்யின் கதிர்வெட்டி
தெரிந்தெடுத்த நெல்லரிசி
தெய்வப் பசுப்பால்தேன்
திகட்டாத பாகிவற்றை
பெய்தே பெறும் பொங்கல்
செய்தான்; உழவனுமே.

000

அன்பு மனேயாட்டி,
ஆன்ற உறவினர்கள்,
இன்ப மதலேயர்கள்
"இன்பம் இது"வென்ன
நல்ல திருநாளாய்
நற்றமிழர் கைக்கொள்ளும்
வல்ல மனப்பண்பாய்
மலர்வுபெறும் தைப்பொங்கல்.

000

சிறுமை விறகாகித்
தீயும், உழவனன்பின்
திறமை அமுதாகிச்
...ரும் அந்த வேளேயிலே
...டாசைச் சுட்டிடுவான்
பையன், எழிற் சிற்ருடை
கட்டுஞ் சிறுமயரோ
"கதிரே! எழுக"வென
கன்னற் கவிபாட
புதிய சுவைப்பொங்கல்
பூரித்து பொங்குகையில்
முன்னே மரபினரின்
முற்போக்கு எண்ணத்தை
உன்னி உலகத்தில்
உண்மை வழியினிலே
இன்றைக்கும் நாமுள்ளோம்
என்றே உயருள்ளம்
ஒன்ற வணங்கிடுவான்
ஓங்கி வடும் வான்பரிதி,

000

"பொங்கல் புதுப் பொங்கல்
பூவிற் புதுமையெலாம்
தங்க வரும் பொங்கல்
தன்மானம் ஓங்கிடவே
எங்கும் இனிமைகளே
ஏற்றம் பெறவைக்கும்
பொங்கல்; எனவாழ்த்திப்
பூரித்து நாமுய்வோம்!

யாழ்ப்பாணத்தில்
'யுனிக்' றேடியோ விநியோகஸ்தர்களான
V. K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்
தமது ஆதரவாளர்கள், பாவனேயாளர்கள்
அனைவருக்கும் தமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்.
V. K. இராசரத்தினம்
பிரபல றேடியோ
விற்பனேயாளர்களும், திருத்துபவர்களும்
95, ஸ்ரான்லி ரோட் :: யாழ்ப்பாணம்.

பொங்கல் பூத்த புன்னகையும்
எங்கள் இன்பப் பொன்னகையும்
உங்கள் வீட்டுக்கின்பம்தரும்
அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்
பொ. அம்பலவாணர்
நகை மாளிகை
119, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.
போன்: 7199

...க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
...ஸ்ருடியோ
போன்: 7067
மணிக்கூடு வீதி,
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கும் நலம் தரும் தைப்பொங்கல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
த்தை புதிய ஆண்டின் பிறப்பாக கொள்ளப்பட்டு ஆரியர் கற்கடக ரேகையில் உச்சம் கொடுக்கும் காலத்தையும், தமிழர்கள் மகர ரேகையில் உச்சம் கொடுக்கும் காலத்தையும் அண்டியே புதுவருடப் பிறப்பின் மாதத்தைக் கணித்தனர். அவ்வாறு கணிக்கும் போது தமிழர்கள் தைமாதத்தை தமது புதுவருடத்தின் பிரதமாகக் கொண்டனர், ஆனல் ஆரியரின் செல்வாக்குப் படர்ச்சியால் தமிழர்கள் பிற்காலத்தில் சித்திரையை புதிய ஆண்டு பிறக்கும் மாதமாகக் கொண்டனர்.

வட இந்தியர் கொண்டாடும் மகர சங்கராந்தி என்னும் ஒரு பண்டிகையே தமிழர்கள் கொண்டாடும் தைப்பொங்கல் என்பர். தைப்பொங்கல் என்பதற்கு நேரான வடசொல் இல்லாமையால் இவ்வாறு சிலர் கூறுவதுண்டு சங்கராந்தி என்பது ஒவ்வொரு மாதத்தின் பிறப்பையும் குறிக்கும். இந்தவகையில் அமையும் மகரசங்கராந்தி தைமாதப் பிறப்பைக் குறித்தாலும் அது தமிழர்கள் தனிப் பெருமையாகக் கொண்டாடும்தைப்பொங்கலுடன் ஒப்பிட முடியாது.

வட இந்தியர் கடவுளுக்கு கொடுப்பதை தீயிலிட்டு அதன் வாயிலாகவும், தமிழர்கள் இலையில்படைத்து மனத்தின் வாயிலாகவும் கொடுக்கும் முறை வேறுபாட்டின் அடிப்படையில் பார்க்கும்போதுகூட தமிழர்களின் தனிவிழாவாகவே தைப்பொங்கல் விழா அமைகின்றது.

மகரசங்கராந்திப் பொங்கலுக்கு முதல் நாள் நடைபெறும் விழாவை போகிப் பண்டிகை ஆகும். இதுவே இந்திரவிழா என்று கூறுவாருமுளர்.

**வடமொழி பாகவத புராணம்**

இந்திரன் செருக்கை அடக்கவும், மக்களுக்கு மெய்யுணர்வு ஊட்டவும் கோவர்தனம் மலைக்கு பொங்கலிடுக எனக் கண்ணன் அருளியபடி மக்கள் பொங்கலிட்டபோது கண்ணன் உண்டருளி மாயம் செய்தபோது இந்திரன் கோபம் கொண்டு கல்மழை பெய்யச் செய்தான். கண்ணன் கோவர்தனத்தைக் குடையாக பிடித்து மக்களைக் காத்ததாக வடமொழியிலுள்ள பாகவத புராணம் கூறுகிறது.


அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

**செ. காசிப்பிள்ளை அன் கோ.**

(பிரபல பிடவை வியாபாரிகள்)
82, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சி. கே. பி. 74/8, பெரியகடை, யாழ்ப்பாணம்.



வாடிக்கைக்காரர்களுக்கும் மற்றும்
அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!

வடமாகாணத்தில்
சகல வசதிகளும் கொண்ட
மிகப்பெரிய நவீன ஹோட்டல்




**சுபாஸ் டூரிஸ் ஹோட்டல்**

(இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபையாரால் அங்கீகரிக்கப் பெற்றது.)
15, விக்டோரியா ரேட். (போன்: 7228) யாழ்ப்பாணம்.


# பொங்கற் புதுநாள்!

-மோ. தார்சீசியஸ்-

பொங்கல் நாளாம் புதுநாளாம்
புனிதம் திகழும் பொன்னுளாம்
பொங்கும் மங்களத் திருநாளாம்
பூரண இன்பப் பெருநாளாம்.

நல்லவை இன்று தெரிந்திடுவோம்
நலமுடனே நாம் வாழ்ந்திடுவோம்
அல்லவை யாவும் அகற்றிடுவோம்
அன்பே வாழ்வெனக் கொண்டிடுவோம்.

நன்றே நாங்கள் கூடிடுவோம்
நலமாய்ப் பாடி ஆடிடுவோம்
இன்றே வையம் இனிதோங்க
இன்பப் பொங்கல் பொங்கிடுவோம்.

★

# எழுக நாட்டிற் பொங்கல்

-அரியாலையூர், வே. ஐயாத்துரை-

வழுவி டாது தமிழர் போற்றி
வாழ்த்து கின்ற பொங்கல்
உழவ னோடு ஒன்றி ஓங்கி
ஒளிரு கின்ற பொங்கல்.

கோல மிட்டு வாழை நட்டு
மாலை கட்டும் பொங்கல்
சில முற்ற திங்கள் தன்னில்
திகழு கின்ற பொங்கல்.

காலை தொட்டு மாலை மட்டும்
கைய டிக்கும் உழவன்
ஞாலத் தோடு பாடு பட்ட
நல்லு ழைப்புப் பொங்கல்.

உழவு காட்டும் விளைவு வீட்டில்
அழகை ஊட்டும் பொங்கல்
முழுமை காட்ட மகிழ்வி னோடு
எழுக நாட்டிற் பொங்கல்.

மண்ணை நாட்டி மண்ணை ஏற்றி
மணியை இட்ட பொங்கல்
விண்ணை நோக்கி மேலெ ழுந்து
விளங்கு கின்ற பொங்கல்.

எண்ணெய் ஊற்றித் தீப மேற்றி
இறையை ஏத்தும் பொங்கல்
எண்ணந் தன்னை நல்ல தாக்கி
இன்பங் காணும் பொங்கல்.

★

# வெற்றிப் பொங்கல்!

-சிந்தனைச் செல்வன்

பருப்பு பால்தேன் பாகுடனே
பாங்காய் அடுப்பின் கலத்தினிலே
நெருப்பின் சூட்டால் கொதித்துளத்தில்
நிலைத்த அன்பின் பெருக்கமுடன்
வேகும் நேற்றை துன்பமெல்லாம்
விடிய வெற்றிப் பொங்கலென
ஆகும் அயலோ டுறவினர்
அருந்தி மகிழ்வார் அகமெலாம்.


புதுமை பூக்கும் பொங்கற் புதுநாளில்
புன்னகை எங்கும் பூக்கட்டும்!
இதயம் கலந்த எம் ஆசி
என்றும் தங்களுக்காகும்!

இன்றேவருக! நன்றேகொள்க!!

தங்க, வைர நகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்த நாணயமுள்ள
ஸ்தாபனம்

**ராணி ஆபரண மாளிகை**

224, கே.கே.எஸ். ரோட் யாழ்ப்பாணம்.
மனேஜர்: A. KARAPUTUGALA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உஷத்கால பூஜையும் பொங்கற் பண்டிகையும்

சிவபெருமானுக்குச் செய்யும் பூஜைகள் நித்தியம், நைமித்தியம், காமியம் என மூவகைப்படும். அவற்றுள் நைமித்தியமாகிய தனுர் மாசத்திற் செய்யும் பூஜை மிகச்சிறந்ததாகும். தேவர்கட்கு ஒரு நாள் நமக்கு ஒரு வருடகாலமாகும். தை முதல் ஆனிவரை பகற்காலமெனவும், ஆடி முதல் மார்கழி வரை இராக்காலமெனவும் கூறுவர். பகற்காலத்தை உத்தராயன காலமெனவும் இராக்காலத்தை தக்ஷிணாயன காலமெனவும் கொள்வர்.

சிவபெருமானைக் குறித்து அர்ச்சித்து வழிபடுவதற்குரிய காலங்கள் ஐந்து. அவையாவன:- உஷத்காலம் பிராதக்காலம். உச்சிக்காலம், சாயங்காலம், அர்த்தயாமம் என ஐந்துமாம். மார்கழி மாசத்தில-உஷத்காலத்திலும், தை மாசத்தில்- பிராதக் காலத்திலும். சித்திரை மாசத்தில்-உச்சிக்காலத்திலும், ஆடி மாசத்தில்- சாயங்காலத்திலும், ஐப்பசி மாசத்தில்- அர்த்தயாமத்திலும் வழிபடுவது மிகவும் உத்தமமாகும் என ஆகமங்க்ள் கூறுகின்றன.

சூரியபகவான் வடக்குப் பக்கத்தில் ஒதுங்குங்காலம் உத்தராயனம் எனப்படும். இராத்திரி காலத்திற்கு முடிவாகிய மார்கழி மாசம் விடியற்காலத்தில் மானுடராகிய நாம் காத்திருந்து தேவதாப்ப்ரார்த்தனை உதவியாற் சகல காரியமும் இடையூறின்றி முடிவெய்தப் பிரார்த்தித்து வருகின்றோம், இம்மாசத்தில் திருப்பள்ளியெழுச்சி. திருவெம்பாவை வளர்பிறையில்வரும் திருவாதிரை வருமுன் ஓதுவித்து, திருவாதிரை நக்ஷத்திரத்தில் எம்பெருமானைத் துதித்து வழிபடுகிறார்கள். வேதம் ஸங்கீதம், யோகவித்தை முதலிய பல கலைகளையும் விடியற்காலத்திலேயே அப்பியாசம் பண்ணுகிறார்கள். ஸத்வகாலமாகிய விடியற்காலத்தில் ஸத்வ க்ஷேத்திரமாகிய தேவாலயத்தில் ஸத்வப் பொருளாகிய இறைவனை ஸத்வ குணத்திற்றோய்ந்த மனத்தால் ஸத்வதிரவியம் ஸத்வபுஷ்பம் முதலியவற்றால் ஸத்வபூஜை செய்வதனால் உத்தமமான பலனைத் தருவார். அன்பர்களே, பெறுதற்கரிய இப்பிறவியைப்போக்காது நாம் நித்தியமாய் வாழவேண்டுமானால் சைவமக்கள் யாவரும் விடியற்காலம் நாலு மணிக்கு எழுந்து ஸ்நானஞ்செய்து விபூதி, உருத்திராக்ஷம் தரித்து விதிப்படி பஞ்சாக்ஷர ஜபம் செய்து சிவாலயதரிசனஞ்செய்யவேண்டும்.

தனுர்மாசம் - மார்கழி மாசம், மகரமாசம்—தைமாசம் எனப்படும். சூரியபகவான் ஓர் இராசியிலிருந்து மற்றஇராசிக்குப் பிரவேசிக்கும்காலம் சங்கிராந்தி எனப்படும். சூரியபகவான் உலகத்தின் பிரத்தியக்ஷ கடவுள். அவரை நாம் தந்தை என்றும் சந்திரனைத் தாய் என்றும் கூறுவோம். வேதம் இவ்விரண்டையும் அங்கீகரித்துள்ளது. ஓரறிவு முதல் ஆறறிவுவாய்ந்த மனிதர்வரையும் உள்ள ஜீவராசிகள் வரைக்கும் அசையாது நின்று உயிர்வாழ்கின்ற மரம், செடி கொடிகளுமே சூரியனைக் கொண்டே உயிர்வாழ்கின்றன சூரியன் கிரகங்களுள் ஒன்று. நவ கோள்களுள் நடு நாயகமாக விளங்குவது, மற்றைக்கிரகங்களையுங்கிரகித்து ஆகர்ஷித்து இயக்குவிக்கும் பெருமைவாய்ந்தது. அதனால், சூரியபகவானைச் சூரிய கிரகம் என்று அழைக்கின்றனர் முக்காலமும் உணர்ந்த பெரியோர்.

-ப. சர்வேஸ்வரக்குருக்கள்-

சூரிய பகவான் காசியப்ப முனிவருக்கும், அதிதிதேவிக்கும் புத்திரனாகப் பிறந்தவர்; துவஷ்டாவின் புதல்வியாகிய சஞ்சாதேவியை மணந்தார். அவள்பால் வைவசுதன், யமன் என்னும் இரண்டு ஆண் மகவையும், யமுனை என்னும் பெண் மகவையும் பெற்றார் என்று நூல்கள் கூறுகின்றன. உதய கால சூரியனைப் படைப்புக் கடவுளாகிய பிரம்மசொரூபமென்றும், மத்தியானச் சூரியனைச் சங்கார கர்த்தாவாகிய சிவ சொரூபமென்றும், அஸ்தமனகாலச் சூரியனைப் பரிபாலன கர்த்தாவாகிய விஷ்ணு சொரூபமென்றும் தியானிப்பதே முனிவர்கள் கருத்து. சூரிய பகவானுக்குப் பல நாமம் உண்டு. தினத்தைச் செய்வதால் தினகரன் என்றும், பிரபாகரன் முதலிய சகஸ்ரநாமங்களாலும் வணங்குகின்றார்கள். நாம் காண்கின்ற இந்த அண்டம் சூரியனை ஆதாரமாகக் கொண்டது. வியாசர் சூரியனைப் பற்றிக் கூறியிருக்கிறார். பன்னிரு வடிவம் கொள்ளும் சூரிய பகவான் ஆகாய வீதியிலே தமது உக்கிரமான கிரகணங்களை வேகமாகப் பரவவிட்டுச் சஞ்சரிக்கிறார். ஆனால் அவரது கிரகண வேகம் முழுவதும் பூமியிற் படுமாகில் நாமெல்லாம் வாழமுடியாது. இதனை மனத்திற் கருதி. அஃதாவது இவ்வெப்பத்தைப் பூமியிற் படாதவாறு பெருங்கருணையோடு தாங்களே கிரகித்து உயிர்கள் தாங்கத்தக்க ஒளியையும். வெப்பத்தையும் தந்து உதவி புரிகிறார்கள். தெய்வீக முனிவர்கள் சூரிய மண்டலத்திலிருக்கின்றனர் என்பது ஐதீகம். அம்முனிவருக்கு இடையூறு வராதிருக்க முருகப்பெருமான் தமது திருக்கரத்தை உயர்த்தி அம்மகான்களைக் காத்து வருகிறார் என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

'விண்செலன் மரபின் ஐயர்க்கேந்தியது ஒருகை'

இப்பூவுலகில் வசிக்கும் ஆஸ்திகச் செல்வர்கள் ஒவ்வொருவருக்கும் பலவிதப் பண்டிகைகளுட் சிறந்தது இப் பொங்கற் பண்டிகை ஒன்றே. தேவர்களுக்குச் சூரியோத காலமாகவும் நமக்குச் சுபகர்மங்களைச் செய்வதற்குரிய காலமாகவுமுள்ள இத் தினத்தை உத்தராயன புண்ணிய காலம் என்றும் தைச் சங்கிராந்தி மகர சங்கிராந்தி, பொங்கற் பண்டிகை எனப் பலபெயர்களாற் குறிப்பிடுவர்.

பொங்கல் நாளன்று விடியற்காலம் சூரியோதயத்திற்கு முன்னரே எழுந்து இல்லத்தையும் முற்றத்தையும் மெழுகிக் கோலமிட்டு புறத்தூய்மை, அகத்தூய்மையுடையராய் மாவிலை, மஞ்சளிலை, சந்தனம் குங்குமம்புஷ்பம்முதலியவற்றால்பொங்கற் பாண்டத்தை வளர்ப்புச் செய்து அதிற் பால் வார்த்து முற்றத்திலே பொங்க விடுவர். பொங்கல் எத்திசை நோக்கிப் பொங்கி வழிந்தோடுகிறது என்று பார்த்து நன்மைதீமையறிவர். இந்துக்கள் பாற்பொங்கலை மிகவும் பயபக்தியோடும் சிரத்தையோடும் பொங்கி வழிபடுவர். பொங்கிப் படைத்த பின் சூரிய பகவானுக்கு பிரீதியாகத் தலைவாழையிலையிற் பொங்கிய அமுதை படைத்துக் கனிவர்க்கங்களையும் கரும்பையும் நிவேதித்து வணங்குவர். புதி

(8-ம் பக்கம் பார்க்க)


வாடிக்கைக்காரர்களுக்கும் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த

**பொங்கல் வாழ்த்துக்கள்**

"தையே இன்பம் சகலதும் அளிக்கும் சாந்த மாதம்
வீடு கட்ட உகந்த மாதம்!"

உங்கள் வீடுகளைக் கட்டத் தொடங்குங்கள்.
உங்கள் வீட்டிற்குத் தேவையான
சகல விதமான சாமான்களுக்கும்
எம்மிடம் தொடர்புகொள்ளுங்கள்

★ யானை மார்க்
அஸ்பெஸ்டர்ஸ்
கூரைத் தகடுகள்

வெளிநாட்டில் தயாரித்த
முள்ளுக்கம்பிகள்
நீர்வேலிச் சங்கத்தினுல் தயாரிக்கப்பெற்ற
★ சிறந்த சீவல் கத்திகள்
★ பாக்குவெட்டிகள்
★ வீட்டுக் கத்திகள்
★ கிண்டிப்பிணைச்சல்கள்
இன்னும்
திறமான எத்தனையோ பாவனைப் பொருள்கள்

★ பூட்டுகள்
★ பிணைச்சல்கள்
சகலவித
பொருட்களும்

★ சினேசம்
இன்னும்
திறமைவாய்ந்த
பெயின்ற் வகைகள்
பித்தளைப்பூட்டுகள்
பிணைச்சல்கள்

★ 'குரங்கு' மார்க்
தென்னபிரிக்காவில்
தயாரிக்கப்பெற்ற
''ஸ்பிரிட்''
'குரங்கு' மார்க்
தோட்ட
மண் வெட்டிகள்

குறைந்த விலையில் சிறந்த பொருள்கள்

**ஸ்டீல்சன்ஸ்**

287-289, ஸ்ரான்லி வீதி, (தொலைபேசி: 7035) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உஷத்கால பூசையும்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாய் விளைந்து அறுத்தநெல் அரிசி முதலிய தானியங்களை அமுது செய்து முதல் முதல் தேவர்களுக்கு நிவேதித்து ஆராதித்து மக்கள் உண்ணுதல் வேண்டுமென ஸ்ரீபகவானே தமது கீதையில் அருளிச் செய்துள்ளார்.

அவ்வாண்டில் விளைந்த நெல்லின் அரிசியை இட்டுச் சூரியனை நினைத்துப் பொங்கிப் போற்றி நைவேதிப்பதனால் உலகோர் இதனைப் பொங்கற் பண்டிகை என வழங்கலாயினர், பொங்கவிடும் சமயத்தில் முதலிற் பொங்கிவரும் கொதி நீரை விவசாயிகள் எடுத்துத்தமது வயலின் கண்ணுள்ள பயிர்களுக்கு வேப்பிலை அல்லது மாவிலைகளாற் பொங்கலோ பொங்கல் என்று கூறித் தெளிப்பார்கள். இதனால்நற் பலன் கிட்டும் என்பது அவர்கள் உண்மையான எண்ணம்.

தக்ஷிணாயனத்தில் ஏற்படும் பீடைகள் நீங்கும் பொருட்டு மேகாதிபதியாகிய இந்திரனைக் குறித்துப் பூசிப்பதால் மேகம் மழை பொழிந்து நாடு சுபீட்சம் அடையும். போக போக்கியங்களுக்கெல்லாம் அதிபதி தேவேந்திரனே யாகையால் இப்பண்டிகைக்கு போகிப் பண்டிகை என்ற பெயர் உண்டு. பொங்கலின் முதல் நாள் போகிப் பண்டிகை என்பர்.


பொங்கலின் மறுநாள் மாட்டுப் பொங்கல் பண்டிகை. வேளாண்மையே வையகத்தின்ஜீவன். ஆகையால் அதுமக்களாலே சிறப்படையவேண்டியிருப்பதால் மக்களின் ஒரு பகுதியான தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டுப்பால், தயிர் நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியத்துக்குப் பசுக்களே முக்கியம். அதனால் பசுக்களைக்குறித்துப்பொங்கலிடுபவர் அன்று பசுக்களைக்குளிக்க வார்த்து வஸ்திரம், சந்தனம், குங்குமம் புஷ்பம் என்பனவற்றால் அலங்கரித்துப் பொங்கற் பூஜை செய்து பொங்கல் அமுது பழவகைகளை அவற்றுக்கு உண்ணக் கொடுத்து அவற்றை வணங்குவர் இத்தினத்திற் காளைகளுக்கு ஓய்வு கொடுப்பார். இப்பொங்கலைப் பட்டிப் பொங்கல் மாட்டுப்பொங்கல் (மாடு, கன்று பெருகி வாழும் என்பதனால்) பசு நாயகனாகிய ஸ்ரீ கோபாலனை நோக்கிப் பொங்கலிட்டு வழிபடுவர் பசுக்களைக் குறித்துச் செய்யப்படும் பொங்கற் பூசைகளால் ஸ்ரீவேணுகான கோகுல கிருஷ்ணபகவானுக்குப் பிரீதியுண்டாகும் என்பது அதிமுக்கியமாகும்.

## சுந்தர உழவர்க்கே பொங்கிடுவோம்

- நிலவின்தாசன் -

குளிர்ந்திடின் வானம் விழுந்திடும் துளிகள்
குளங்களி லெல்லாம் நீர் தேங்கும்
வளர்ந்திடும் நெல்லு உழவரின் உளமும்
மலர்ந்திடும் வாழ்வு இனியென்று
தளர்ந்திடார் அன்னார் தற்செயலாகத்
தம்தொழில் நட்டமே யுற்றிடினும்
உளந்தனில் தூய்மையே தேங்கிடுமுழவரின்
உள்ளம்போல் பொங்கலும் வந்ததுவே.

வந்தது பொங்கல் மலர்ந்தன உள்ளம்
மாரியிற் சூரியன் வந்துநின்றான்
தந்தனர் நன்றிப் பெருக்கினிலுழவர்
தம்சுவைப் பொங்கலை மற்றுமுள
செந்தமிழ் வீடுகள் எங்குமேபொங்கலை
செய்தனர் தம்முயர் விழாவெனவே
சொந்த மகிலமும் என்றுவழங்கிடும்
சுந்தர உழவர்க்கே பொங்கிடுவோம்.




பூவுலகின் எத்திசையிலும், லான்ட்மாஸ்டர் 150 ஒன்று நிச்சயமிருக்கக் காண்பீர்கள். பலமானது நம்பிக்கையானது-அமோக பணிகள் பல புரியவல்லது, நானிலமெங்கும் பரவிய சேவை வசதிகள் கொண்டது.


இத்தகைய தகுதிகள் கொண்ட வலிமிகு பணியாளியின் உருவாக்கம் ஓர் இலங்கையரையே சாரும். ஆசிய நிலைமைகளை மனதிற் கொண்டு உருவான இவ்வுயர் படைப்பு இலங்கையில் 2000 த்திற்கும் அதிகமான விவசாயிகளால் பாவிக்கப்படுகிறது. நாடெங்கிலும், பயிற்சி பெற்ற, வேண்டிய உபகரணம் கொண்ட, சேவை நிலையங்கள் உதவி பின் கொண்டது. உங்கள் தேவைகளுக்குத்தக்கதாக வேண்டிய மேலதிக உபகரணங்கள், உறுப்புக்கள் வசதியும் கொண்டது லான்ட்மாஸ்டர்.

லான்ட்மாஸ்டர் 150, இலகுவாகச் செலுத்தக் கூடியது. வேண்டியபோது உழுதலைக் கூட்டலாம்.


உங்கள் வருவாய்க்குத் தகுந்த இலகுவான பணக் கட்டண வசதிகள் உள்ளன.



நிரையறுத்தும் சுற்றிகள் உருளைக்கிழங்கு, கரும்பு நிரையறுத்தல் மாற்றக் கூடிய அளவுகளில்



குழாய் மணிக்கு 6000 கலன் இறைக்கவல்லது. தூவல், நிமிர்த்தல் நீர்ப் பாய்ச்சலுக்குச் சிறந்தது.



நிலையான நிரைவெட்டி உழுசாலை 12'' — 18'' நிரையறுக்கவும் வித்து பந்தியை ஆயத்தப்படுத்தவும் மாற்றக்கூடியது.

### லான்ட்மாஸ்டர் 150 மாநிலத்தின் வலிமைமிகு தொழிலாளி

பிரவுண்ஸ் குறூப் இன்டஸ்ரீஸ் லிமிட்.

BG லான்ட்மாஸ்டர் 150

அத்திடிய வீதிக்கு அப்பால், இரத்மலானை. டெலி: 71-478

GRANT 429125 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org